ஆனந்தம்

மலர் 8 இதழ் 10

Oct 1935

JL
R673[illegible]21 1128
1935 8.18
187111

415

Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 8—No. 10.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

மலர் அ	யுவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 1935 ஆ அக்டோபர் மீ	இதழ் ௧௦

உள்ளுறை

	பக்கம்
ஞானமிர்த மூலமும் விளக்கவுரையும் ...	௪௦௧
தாயுமானவர் தத்துவ விளக்கம்	௪௧௧
தமிழர் மதவளர்ச்சி	௪௧௭
தடுத்தாட்கொண்ட புராணம்	௪௨௪
ஆரூரர் அன்பு	௪௨௯
சித்தாந்த சாத்திரம்	௫௫௫ - ௫௮௪

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A. (Hons.)

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

சமாஜ ஆண்டுவிழா

நமது சமாஜத்தின் முப்பதாவது ஆண்டுவிழா நடைபெறும் இடம், காலம், தலைவர் நியமனம், நடைமுறை விசேடங்கள் முதலிய பல பொருள்களைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்ய நமது சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று சென்னை இராயப்பேட்டை ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகாநந்த நிலைய'த்தில் 1935௵ அக்டோபர்௴ 19௳ சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். அன்றையதினம் கூட்டம் நடைபெறுதற்குத் தேவையான கூட்ட நிறைவெண் (Quorum) இல்லாவிடில் அக்கூட்டம் அதே யிடத்தில் அடுத்தநாள் அதே மணிக்கு வருபவர்களைக் கொண்டு முடிவடையும். சமாஜ நிர்வாக சபைக்கூட்டமும் 20-10-35-ல் மாலை 3-30 மணிக்கு ஷை இடத்தில் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் வருக. வெளியூர் அங்கத்தினர் உடனே தபால் மூலம் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவும்.

சிவப்பிரகாச வகுப்பு

திருவாளர் - எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் நமது சமாஜச் சார்பில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் காலை 8 மணி முதல் 9 மணி வரையில் நடத்திவரும் **சிவப்பிரகாசவகுப்பு** மயிலாப்பூர் புதுத்தெரு 2/7-வது எண்ணுள்ள அவர்களது இல்லத்திலேயே நடைபெற்று வருகிறது. சைவ இளைஞர் பலர் இவ்வகுப்புக்கு வாராது அவமே காலம் போக்குதல் பெரிதும் வருந்தத்தக்கது. இனியேனும் விழிப்பாக அவர்கள் இவ்வகுப்பைப் பயன்படுத்திக்கொள்வார்களாக.

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திரு. டி. வி. ஆதிசேஷ முதலியாரவர்கள் ஆதரவில் எழும்பூரில் அப்பர்சுவாமிகள் சரித்திரத்தை மிக விரிவாகச் சொல்லி வருகிறார்கள். இடையிடையே மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, சிந்தாதிரிப்பேட்டை, தியாகராயநகர், சேற்றுப்பட்டு, இராயபுரம், கீழ்ப்பாக்கம், கந்தகோட்டம் முதலிய பல இடங்களில் அரியசொற்பொழிவுகள் நடத்தி வருகிறார்கள். சில நாட்களுள் சென்னையிலிருந்து புறப்பட்டு ஆரணி மடத்தில் தங்கி ஸ்கந்தர்சஷ்டிக்கு ஒரு வாரம் முன்பு திருப்பாதிரிப்புலியூரை யடைவார்கள் என்று அறிகிறோம். சென்ற ஆண்டிலும் இவ்வாண்டிலும் சென்னைக்கு வந்து அறிவு விளக்கத்தொண்டு புரிந்ததுபோலவே ஒவ்வோராண்டிலும் சுவாமிகள் சென்னைக்குப் போந்து திருவருள் நெறியில் சைவ நன்மக்களை நிறுத்துவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

Registered No. M. 2330

17 OCT 1935

சித்தாந்தம்

“ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு”

மலர் ௮	யுவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 1935௵ அக்டோபர்௴	இதழ் ௧௦

ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும்

[திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திருவோத்தூர்]

விநாயகர் துதி

அகவல் 2

திங்கட் கொழுந்தின் அன்ன ஒண்கேழ்
ஒருமருப் பிருமதக் கடவு ளெண்கழி
யாண்டுபல நிரம்பினும் இளமையொடு கெழீஇ
ஞான மாமதம் தருக்கி ஆனை
வினாயகச் சீறும் நனைகவுள் வேழத்
தடியிணை ஒடிவின்று பழிச்ச
முடிவி லாதெவன், முன்னிய நெறித்தே.

இது, விநாயகக் கடவுளின் திருவடிகளைப் பரவுதலினால், எடுத்துக்கொண்ட இலக்கியம் எண்ணியவாறு முடிவதல்லது முடியாமை சிறிதும் இல்லை என்கின்றது.

உரைமுடிபு :—ஒரு மருப்பும், இருமதமும், இளமையொடு கெழீஇ, மதம் சுருக்கி, வினையுகச் சீறும் வேழத்து அடியிணை பழிச்ச, முன்னிய நெறிதசே(அன்றி) முடிவிலாதது எவன் ? இல்லை என்பது

உரை :—பிறைச் சந்திரனை யொத்த ஒள்ளிய நிறம் பொருந்திய மருப்பு ஒன்றும், மதம் இரண்டும், தேவர்கள் எண்ணும் எண்ணுவரை கடந்த யாண்டுகள் பல ஆயினும் குன்றாத இளமைத் தன்மையொடு பொருந்தி, ஞானமாகிய அழகிய மதம் சிறந்து, ஆன்மாக்களைவிட்டு நீங்குதலமையாத வினைகள் நீங்குமாறு சீறிக்கொண்டு போதரும், மதநீரால் நனைந்த கபோலத்தையுடைய வேழமுகத்தோனாகிய விநாயகக் கடவுளின் திருவடி யிரண்டனையும் தளர்வின்றிப் பரவினால், எடுத்துக்கொண்ட இலக்கியம் எண்ணியவாறே முடிவதன்றி முடியாதொழிவது ஏது ? இல்லை என்றவாறு.

திங்கட்கொழுந்து, பிறைச்சந்திரன். ஐகார வேற்றுமைத் திரிபு கூறியவழி, "சாரியை யுளவழித் தன்னுருபு நிலையலும்" என்பதனால் சிறுபான்மைச் சாரியை யுள்வழித் தன்னுருபு கெடுதலும் கொள்ளப்படுதலின், கொழுந்தின் என்றவிடத்து இன்சாரியை உருபுதொக நின்றதென்க. "தீயினன்ன வொண்செங் காந்தள்" (மலைபடு.) என்றார் சான்றோரும். கெழுவென்பது கேழ்என வந்தது. ஒண்கேழ் என்பதில் ஒட்பம் அழகும், கேழ் ஒளியும் எனக் கொள்வர் பழைய வுரைகாரர். ஒற்றை மருப்பிற்குத் திங்கட்கொழுந்து வடிவும் நிறமும் பற்றிவந்த உவமம். "விரவியும் வரூஉம் மரபினவென்ப" (தொல். பொ. 277) என்பது விதி. ஒரு மருப்பும் இருமதமும் இளமையொடு கெழீஇ, தருக்கி, சீறும் வேழம் என இயையும். தேவயாண்டெனவும், தேவயுகம் எனவும் எண்ணப்படுத லுண்மையின், "கடவுள் எண்கழி யாண்டு" எனப்பட்டது. இளமையொடு என்புழி ஒருவினை

யொடு இளமையது வளமைச் சிறப்புணர நின்றது. ஆனாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சத் தகரம் விகாரத்தால் தொக்கது. நனைகடவுள், வினைத்தொகை. ஒடிவு, தளர்வு; "ஒடியா உள்ளமொடு உருத்து" (பரி 2 : 36) என்றாற் போல. இன்றியென்னும் வினையெஞ்சிறுதி இன்று என நின்று இயல்பு முடிபுபெற்றது. "விண்ணின்று பொய்ப்பின்" (குறள் - 12) என்பது திருக்குறள். செயவெனச் சம் காரணப்பொருட்டு. முடிவிலாதது எனற்பாலது முடிவிலாது என நின்றது. வினைப்பெயர் இன்மை குறித்து நின்றது. ஏகாரம் தேற்றம்.

இருமருப்பே யுடையராயினும், உயிர்கட்கு இடுக்கண் விளைத்துத் திரிந்த கயமுகன் என்னும் அசுரனைக் கொன்று, அவற்றிற்கு இன்பம் விளைக்குமுகத்தால் ஒடிக்கப்பட்டமையின், "ஒருமருப்பு" கூறப்பட்டது. "பெற்ற நல்வரத்தினைக் குறித்திமையவர் பெருமான், ஒற்றை வெண்மருப் பயில்நுதி ஒடித்தெதிர் விடுத்தான் உற்றவெய்யவன் உரங்கிழித் துயிருண்டு போகி, முற்றுசுத்த நீர்க்கட லிடைமூழ்கி மீண்டதுவே" (விநா - புரா - லீலா - கணபதி : 77.) என வரும் செய்யுளால் இவ்வரலாறு அறியப்படும்.

யானை யுறுப்புக் கழுத்திற்கு மேலன்றி இன்மையின் இருமதமே கூறினார். இந்திரிய மதம் இன்றி ஞானமதம் பொழிதலின், மதம் மூன்றுதல் கொண்டு "மும்மதத்தன்" எனச் சான்றோர் கூறுபவாயினும், வேழத்திற்குரிய மும்மதங்களோடு முழுதும் ஒவ்வாமையின், ஒத்தன இரண்டையும் "இருமதம்" (2) என்னும், ஒவ்வாததனை "ஞானமா மதம் தருக்கி" (4) என வேறு நிறுத்தியும் கூறினர். அவ்விரண்டுமாவன கன்னமதமும், கபாலமதமும் ஆகும். அவற்றின் ஒழுக்கம் பற்றி "நனைகவுள்" (5) எனப் பிற் கூறினர். "பிரமசாரியானபடியால் இந்திரிய மொழிந்த இரண்டு மதம்"

எனப் பழையவுரைகாரர் கூறினர். இதனால், பிரமசரியம் நீங்கியவழி இந்திரிய மதமும் உண்டாமென்பதுபட்டுப் பொருள் சிறவாமை யறிக. சில புராணங்கள் விநாயகருக்குத் திருமணமும் கூறுமாகலின்.

மக்களால் எண்ணப்படும் காலவளவைகள் தேவர்கட்கு மிகச் சிறியவாதலின், நீண்ட அளவையினையுடைய தேவயாண்டே ஈண்டுக் கருதப்படும் என்றற்குக் "கடவுள் எண்கழி யாண்டு (2-3) என்றார். கடவுளருலகினும் அவரவர் பதவுயர்ச்சிக் கேற்பக் காலவளவைகள் மிக்குச் செல்லுமாகலின், பொதுப்படக் "கடவுள் எண்கழி யாண்டு" என்றார். இனிப் பழைய வுரைகாரர், கடவுள் என்பதனை "ஒருமருப் பிருமதக் கடவுள்" எனப் பிரித்து நிறுத்தி, "எண்கழி யாண்டு" என்பதனை வேறு கொண்டுரைப்பர். அதனால் "நிரம்பினும்" (3) என்புழி நின்ற சிறப்பும்மையின் சிறப்புப் பொருண்மை சிறவாமையினாலும், பொருட் டொடர்பு இடையறுந்து செய்யுட் பொலிவு குன்றுதலினாலும் அது பொருளன்மை யறிக. "எண்கழி யாண்டு" என்றதனால் சிறப்புடைய தேவ யாண்டு கொள்ளப்படுமெனின், அவ்வுய்த்துணர்வு சொல்லில் வழியே என மறுக்க. யுகம், ஆண்டு முதலியவற்றாலும், அவ்வளவையில் வாழ்வாராலும் அளக்கப்படுதலின், "யாண்டுபலநிரம்பினும்" (3) என்றார். எனவே, இளமை, காலத்தினை மேற்றாயினும், இவரதிளமை அன்னதன்று என்றவாறும். அழகும் ஒளியும் திகழும் பருவமாகலின், "இளமையோடு" எனச் சிறப்பிக்கப் பட்டது. "இளமையிற் சிறந்த வளமையுமில்லை" (நற்) என்றார் பிறரும்.

வினை மதத்தால் தருக்குதல் இறைமைக் குணத்துக்குத் தகுதியின்மையின், "ஞானமாமதம் தருக்கி" என்றும், (4) அத்தருக்கு உயிர்கட்கு அச்சமும் அவலமும் போக்கி, ஞானவிளைவுக் கேதுவாகிய பாபக்ஷயம் பண்ணுதலின், "ஆனாவினையுக"

(4-5) என்றும், தொடுவுழி நீங்கி விடுவுழிப் பரவும் பாசி போல,* ஞானக் காட்சியெய்தியவிடத்து நீங்கி, பிறாண்டுப் பரவி உயிர்களை மயக்குதலின், "ஆனாவினை" என்றும், சகச வினையாகலின், "உக" (5) என்றும் கூறியருளினார். நோன்மையால் தன்னையொன்றும் கலத்தலின்றித் தூயதாய் நிற்கும் பரம்பொருளாயினும், தன்னை யடையும் ஆன்மாக்களைப் பிணித்து நிற்கும் வினைத்தொடர்பறுக்கும் மதுகையுடைமை தோன்ற, "நனைகவுள் வேழம்" (5) என்றார். "நனைகவுள் யானையால் யானையாத்தற்று" (குறள். 678) என்றதற்குப் பரிமேலழகியார் எழுதிய விளக்கவுரை காண்க. ஐம்புல வேழங்களை யடக்கித் தன்வரை நிறுத்தும் தலைமை தோன்ற இவ்வாறு கூறினாரென்றலு மொன்று.

ஒடிதல், பரவுதற்கண் சென்ற மனம் முடிவு போகாது, இடையே மடங்குதல். தொடங்கின் இடையில் மடங்குதல் ஆகாமையின், "ஒடிவின்று பழிச்ச" (6) என்றும், அவ்வழி, எடுத்த காரியம் முடிவு போதல் ஒரு தலையாகலின், "முடிவிலாத தேவன்" (7) என்றும், முடியுமிடத்தும் கருதியவாறே முடிதலின்றிப் பிறவாறு முடிதலை விலக்குதற்கு "முன்னிய நெறித்தே" (7) என்றும் கூறினார். முன்னிய நெறியாவது எண்ணிய எண்ணியாங்கு எய்துதல். "அபேக்ஷையான போகமோக்கங்களிற் சித்தியாதது யாது" என்பது பழைய வுரை. இப்பொருளொக்குமாயினும், இந்நூற் பாயிரத்தோடு இயைபு விளங்குமாறின்மையறிக.

---

*ஊருண்கேணி யுண்டுறை தொக்க, பாசியற்றே பசலை காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப் பரத்தலானே' என வரும் குறுந்தொகைப்பாட்டால் பாசியின் இயல்புணர்ந்து கொள்க.

வாணி துதி

அகவல் 3

விரிகதிர் மதியிற் கதிர்விரி பொகுட்டுத்
தாதரு கடுத்த மேதகு வெண்மடற்
புழற்காற் *சரோருகத் தளிக்குலம் ஒலிப்ப,
விழைவற வெருண்டோர் விழைய இழையென
அருட்கதிர் பரப்பி மருட்டுயர் அகற்றி
வண்ண மாத்தவி சேறிப் பண்வரக்
கின்னர ராதிகள் தம்முறை தொடங்கப்
பொழுதொடு விப்பிரர் தொழுதனர் நுவல
இமையா மங்கையர் அமையாது பழிச்சத்
தீதற இருந்த ஆதி நாயகி
கலைமகள் கழலிணை கருத
நிலைமை நீடுதல் தலைமையோ அன்றே.

இது, சரோருகத்து வண்ணத் தவிசேறி, உயிர்கட்கு ஞானமெய்த வீற்றிருக்கும் வாகீசுவரியின் திருவடிகளை நினைத்து வணங்குதலால், இந்நூல் இனிது முடிதல் ஒரு பொருளன்று; மிக எளிதாம் என்கின்றது.

உரைமுடிபு:—மதியிற் கதிரும், பொகுட்டும், வெண் மடலும், புழற்காலுமுடைய சரோருகத்து, அளிக்குலம் ஒலிப்ப, வெருண்டோர் விழைய, மாத்தவிசேறி, அருட்கதிர் பரப்பி, மருட்டுயர் அகற்றி கின்னரராதிகள் முறை தொடங்க, விப்பிரர் தொழுதனர் நுவல, மங்கையர் பழிச்ச, இருந்த ஆதிநாயகி, கலைமகள், கழலிணை கருத, நிலைமை நீடுதல் தலைமை யன்று என்கின்றது.

உரை:—சந்திரனுடைய விரிந்த நிலவுபோலும் ஒளியினையும், இடம் அகன்ற பொகுட்டினையும் தாதொடு சேர்ந்த மேம்பட்ட வெள்ளிய இதழ்களையும், உள்ளிற் புழையினை

*புழைக்காற் சரோருகம் என்றும் பாடம்.

யுடைய தண்டினையுமுடைய தாமரையின்கண், வண்டினம் பாட, பற்றறத் துறந்த துறவியர் தன்னை வேண்டித் துதிக்க, அழகிய தவிசுற்றேறி, தன்பேரணிகலன் என்னுமாறு கருணையாகிய கதிர்களை நாற்றிசையும் பரப்பி, உயிர்கட்கு அறியாமை யேதுவாக வரும் துன்பங்களைப் போக்கி, கின்னரம் முதலிய வாச்சியங்கள் தமக்குரிய முறைமைப்படி, பண்ணின் நெறியே நல்லிசை யியம்ப, காலந்தோறும் வேதியர் வேதமோதிப் பரவ, இமையா விழியினையுடைய தேவமகளிர் பணிபுரியுமாறு பெற்ற பேற்றினோ டமையாது மேலும் பராவி நிற்க, ஏனையுயிர்களின் குற்றம் நீங்கும் வண்ணம் வீற்றிருந்த ஆதிநாயகியும், கலைமகளுமாகிய வாகீசுவரியின் இரண்டு சீபாதங்களையும் நினைத்து வணங்குதலால், இந்நூன் முடிவின்கண் எய்தும் இன்பநிலை நீடித்தல் ஒரு பெரும் பொருள் அன்று; மிக எளிதாம் என்றவாறு.

மதியின் என்றவிடத்து இன், உவமப்பொருட்டு. விரி பொருட்டு என்பதற்கு ஏற்புடைய இடம் என்பது வருவிக்கப்பட்டது. தாதரு கடுத்த மேதகு வெண்மடல் என்றவிடத்து மேதகு என்பது இடைப்பிறவரல். புழல், புழை. "இழுதி னன்ன தீம்புழற் றுய்வாய்" (அகம் - 9.) என்புழிப் போல. சரோருகத்து மாத்த விசேறி என இயையும். விழைவு - பற்று. வெருளுதல் - ஈண்டுத் துறத்தல் மேற்று. பொழுதொடு என்புழி, ஒடு, தொறுவின் பொருள்பட வந்தது. இமையா மங்கையர் என்புழிச் சினைவினை முதன்மேனின்றது. அமையாது பழிச்ச என்றதனால், அமைதற்குரியன பெய்து கூறப்பட்டன. நினைத்தலும் செய்கைக் கேதுவாகலின், கருத என்றதற்குக் கருதி வணங்குதல் கூறப்பட்டது. நிலைமையாவது நூல் முடிவின்கண் எய்தும் இன்பநிலை. ஓகாரம் எதிர்மறை. அன்றே, அசைநிலை.

தலைமை, அருமை மேற்றாகலின், எளிதாம் என்பது குறிப்பெச்சம்.

"விரிகதிர் மதியிற்கதிர்" என்பதற்கு "மிக்க ஒளியையுடைத்தாகிய பூரணசந்திரன் இயல்பு" என்று பழையவுரைகாரர் பொருள் கூறுவர். அதன் இயல்பு தேய்தலும், மறுவும் உடைமையாகலின், அது சரோருகத்துக்கும் சென்று பொருட்பொலிவு குன்றுவித்தலின், சந்திரனுடைய விரிகதிர் போலும் கதிர்கள் எனப் பொருள் கூறினும். பொகுட்டு, தாமரைமலரின் நடுவே, வட்டமாய்த் தவிசிட்டது போல இருக்கும் கொட்டை. அது தலையகன்று அடிசிறுத்து அழகமைய விளங்குதலின், "விரிபொகுட்டு" எனச் சிறப்பித்தார். தாதென்றது, ஈண்டுத்தேன் நிறைந்துறையும் அடிப்பகுதியை. அதனருகே, தொடுத்தபோலத் தோன்றி அழகு மிக்குற்று விளங்கும் அமைதியால், "தாதருகடுத்தவெண்மடல்" என்றொழியாது, "தாதருகடுத்த மேதகு வெண்மடல்" என்றும் தாமரையின் இதழ், மடல் போறலின், "மடல்" என்றும் கூறினார். உள்ளிற் புழையின்றாயின், நீரில் மிதந்து பூச்சுமந்து நிமிர்ந்து நிற்றல் கூடாமையின், "புழற்காற் சரோருகம்" என்றார். சரோருகம், வடசொற்றிரிபு. கலைமகட்கு இருக்கையாகிய ஏற்றங் குறித்து வெண்டாமரையை இவ்வாறு சிறப்பித்தார். கதிரும், பொகுட்டும், வெண்மடலும், காலும் உடைய சரோருகம் என இயையும்.

தேனிறைந்து விளங்கும் நாண்மலர் என்றற்கு "அளிக்குலம் ஒலிப்ப" என்றார். அத்தேனையுண்டற்கு அளிக்குலம் ஒலி செய்து சூழ்வருமென்றதனால், தேவரும் பிறரும் கலைமகளின் அருள் நாடித் துதித்து வலம் வருதல் பெறப்படுமாயினும், அவ்வாறு பெறப்படும் ஞானவகை மூன்றனுள், பசு, பாசஞானங்கள் பரம்பொருளைக் காண்டற்குப் போதாவாகலின், பதிஞானமே வேண்டி நிற்கும் பெரியோரை "விழைவற வெகுண்டோர் விழைய" என்று பிரித்துக் கூறினார். "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும், பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே" (சிவ. சித்தி.) நேசத்தாற் காண்பர் எனப் பிறசான்றோரும் கூறுமாற்றானறிக. முற்றத் துறந்த முனிவரர் பதிஞானம் கைவரப்பெற்ற வழியும், பழைய பயிற்சி வயத்தால் ஒரோவழி வாதனை யெய்தி வருந்தாமைப் பொருட்டால், ஞானசத்தியாகிய வாகீசுவரியின் அருள் வேண்டி நிற்பாராகலின், "வெகுண்டோர் விழைய" என்றார். இவ்வாறு தன்னைப் பரவும் ஆன்மாக்கட்கு ஞானமருளுதற் பொருட்டு ஞானத்தலைவரைப் பிரிந்து வருதலின், "வண்ணமாத்தவிசேறி" என்றார். பிறர் கை செய்து பிறக்கும் வனப்புடைய தன்மையின், "வண்ண மாத்தவிசு" எனப்பட்டது. அளிக்குலம் ஒலிப்ப, வெகுண்டோர் விழைய, சரோருகத்துத் தவிசேறி என இயையும்.

தேவியின் திருமேனிக்கட் கிடந்து மிளிரும் அளிகள் செய்யும் ஒளி ஒரு மருங்கு விளங்க, திருமேனியில் எழும் அருளொளி நாற்றிசையும் பரந்து, அணி செய்தலின், "இழையென அருட்கதிர் பரப்பி" என்னும், பசுபோதத்தால் மயங்கி, உண்மை யுணராது வருந்தும் ஆன்மாக்களின் துயர் போக்கி, இன்பம் நுகர்விக்கும் ஏற்றம் கருதி, "மருட்டுயர் அகற்றி" என்றும், துயரகற்றியவிடத்து அதற்கேதுவாகிய மருள் மனத்திற் கிடந்து பின்னரும் துயர் விளைக்குமாகலின், அதனையும் உடன் கெடுத்துப் பின், எஞ்ஞான்றும் வாராவகை யருளுதலின், "மருட்டுயர்" எனக் காரணகாரியங்களை நின்றவாறே கூறினார்.

கேட்டார் மனத்து அருள் பெருகுவிக்கும் இயல்பிற்றாகிய இசை, அருளே யுருவாகவுடைய தேவி திருமுன் இன்றியமையாமையினாலும், அவளது திருவருள் எய்தாவிடத்துத் தம் இசையும் சிறப்புறாதாகலினாலும், "பண்வரக்கின்னராதி

கள் தம்முறை தொடங்க" என்றார். கின்னராதிகள் என்றதற்கு, "கின்னரர்கிம்புருடர் முதலானோர்" என்பர் பழைய வுரைகாரர். "ஆறலைகள்வர் படைவிட அருளின், மாறுதலை பெயர்க்கும்" (பொருந) என்பதனால் இசையருள் பெருகப் பண்ணுமாறறிக.

விப்பிரர், வேதியர். வடசொற்றிரிபு. காலந்தோறும் வேதமோதும் கடப்பாட்டினராகலின், "பொழுதோடு விப்பிரர் தொழுதனர் நுவல" என்றார். "மூன்றுவகைக் குறித்தமுத்தீச் செல்வத்து, இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல" (முருகு) என்றார் நக்கீரனாரும். அருளுருத் தேவியாகலின், தாம் செய்த பணியோ டமையாது, அச்செய்கைக்கட் பிறக்கும் இன்ப நுகர்ச்சியும் ஆர்வமும் நோக்கி மேன்மேலும் அப்பணி புரிதலையே வேண்டிப் பரவி நிற்கின்றாராகலின், "இமையா மங்கையர் பழிச்ச" என்னாது, "இமையா மங்கையர் அமையாது பழிச்ச" என்றார். இனித் தேவியின் உருவ நலம் கண்டு ஆராவின்பம் நுகர்தலால், அக்காட்சி யின்பம், கண்ணிமைத்தலால் இடையறவு பெறும் ஏனைமகளிரின்மேம் பட்டமையால் அமையாது, மேலும் அவ்வின்பமே குறித்துப் பணி புரிதற்கட் சென்ற மனத்தராய்ப் பரவி நிற்க எனினுமாம். தீதற இருத்தல், குற்றமற வீற்றிருத்தல். உயிர் கண்மேற் பெருகிய அருளால் அவற்றின்பாற் கிடக்கும் குற்றம் கெடுமாறு வீற்றிருத்தல் பற்றி "தீதற விருந்த', என்றும், எனவே, அவளே ஞானகாரணி யாதல் பெறப்படுதலின், "ஆதிநாயகி" என்றும், வாகீசுவரி என்னும் வடசொற்கு அது பொருளாகலின், "கலைமகள்" என்றும் பரவினார் மனத்தைப் பிணித்துக் கொண்டு நிற்கும் குற்றங்கட் கேதுவாகிய வினைகளைப் போக்கும் சிறப்புக் கருதி, "கழவினை" என்றும், நினைவார் மனத்து ஞானம் நிகழ்வித்தலின் "கருத" என்றும், எடுத்த காரியத்தை முடிவின்கண் நோக்

கியவழி, எடுத்தாற்கு எல்லையில் இன்பம் கைகூடுதல் இன்றும் நாம் காண்கின்றோமாகலின், ஞானப் பயன் கருதி ஆக்கப் பெறும் இஞ்ஞானாமிர்த நூற்பயன் வீடுபேறே யாகலினாலும், அதனையின்றி நிலையுடையது பிறிதின்மையினாலும் "நிலைமை" என்றும், அதனைப் பெறுதலினும் அரியபொருள் ஒன்றின்றாயினும், தேவி திருவருள் எய்திய விடத்து அதுவும் எளிதிற் பெறப்படும் என்றற்கு, "தலைமையோ அன்றே" என்றும் கூறினார். "நிலைமை நீடுதல் தலைமையோ அன்றே" என்றற்கு, "மோக்ஷம் பெறுதல் ஒருபொருளோ அன்று" என்றே பழைய வுரையும் கூறிற்று.

இதனாற்பயன், கின்னராதிகள் பாட, விப்பிரர் வேதம் ஓத, இமையா மங்கையர் பணிசெய்ய, தவிசேறி யிருந்த கலைமகள், தன்னை நினைவார்க்கு வினைத்தொடர்பகல, மருட்டுயர் நீங்க, ஞானமருளி, வீட்டுலகத் தெய்துவிப்பா ளாகலிலின், அவ்வீட்டுக் குரிய ஞானமுணர்த்தும் இஞ்ஞானாமிர்த நூலும் இடுக்கணின்றி இனிது முடியும் என்பதாம்.

தாயுமானவர் தத்துவ விளக்கம்

[அ. வரதநஞ்சைய பிள்ளை]

புருடார்த்தங்கள் நான்கினுள்ளும் மிகச் சிறந்ததாகிய வீடு பேற்று நெறியை விளக்கற்கெழுந்த பல சமய நூற்களையும் காய்தல் உவத்தல் அகற்றிப் பன்முறை ஒழுங்காகக் கற்று, அவற்றுள் ஒன்றற் கொன்று ஒற்றுமை வேற்றுமை காட்டும்பகுதிகளை நுனித்துணர்ந்து ஆய்ந்து, முன்பின் முரணாதவாறு மெய்ப்பொருளை இயற்கை நெறியோடு பொருந்தக் கூறும் சமயநூல் யாது? என ஒன்றைத் தேர்ந்துகாணுட்

செம்புலச் செல்வர்கள், சைவசித்தாந்த நூல் ஒன்றனையே உவந்து ஏற்றுக்கொள்வார்கள். இவ்வுண்மை அத்தகைக் கூர்த்தமதி நுட்ப முடையார்க்குப் புலப்படுவதன்றித் தாம்கண்டதே சிறந்ததெனத் தருக்கிக் கூறும் ஏனைச் சமய வாதிகட்குப் புலனாவதொன்றன்றாம். அறிந்தோர் கூறினும் அவற்றை மேற்கொள்ளாது அசதியாடுவாரும் பலரே. இத்தகையசைவ சித்தாந்த நுண்பொருட்களை அநுபவவழிகண்டு 'யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' எனக் கருணைகூர்ந்து பிற்காலத்து நூல் செய்த பெரியாருள் நமது தாயுமானவரும் ஒருவர். சிறந்த ஞானப்பேறும் தமதநுபவத்தை யுரைத்தற்கேற்ற இலக்கிய இணக்கணத் தேர்ச்சியும் பெற்ற இம் முனிவர், தமது பெயரால் வெளியிட்ட நூலில் (தாயுமானவர் பாடல்) வேறு எந்நூலினும் காண்டற்கரியவகையில் தத்துவங்களை மிகஎளிமையாக விளக்கிச் செல்லும் பகுதிகளை யாம் அறிந்தவாறு வெளியிடத் துணிந்தேம். 'பிழையுளதேற் பொறுப்பர் பெரியோர்; அஃதவர் தம் பேருளின் இயற்கை' என்று தேற்றி எம்மை இங்ஙனம் தூண்டிய மனவெழுச்சியே இதற்குப் பொருட்டாயிற்று.

தாயுமானவர்பாடல், சச்சிதானந்தசிவம், பத்தாவது செய்யுள்

வேதாவை யிவ்வண்ணம் விதித்ததே தெனினுன்
வினைப்பகுதி யென்ப னந்த
வினைபேச வறியாது நிற்கவிவை மனதால்
விளைந்ததான் மனதை நாடிற்
போதமே நிற்குமப் போதத்தை நாடிலோ
போதமு நினால்வி ளக்கம்
பொய்யென்று தெய்வமறை யாவுமே நீயென்று
போக்குவர வறவி கழ்த்தும்
ஆதார வாதேய முழுதுநீ யாதலா
லகிலமீ தென்னையாட்டி

யாடல்கண் டவனுநீ யாடுகின் றவனுநீ
யருளுநீ மௌன ஞான
தாதாவு நீபெற்ற தாய்தந்தை தாமுநீ
தமருநீ யாவு நீகாண்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதானந்த சிவமே!

இச் செய்யுளிற் கூறும் சித்தாந்த இரகசியங்களை ஊன்றிச் சிந்திப்போம். "ஏ! படைப்புக்கர்த்தாவாகிய பிரமனே! ஐம்புலக்கள்வர் புறத்திலும், காமாதி ஆறு பகைவர் அகத்திலும் அலைக்க அலைப்புண்டு, கணப்பொழுதேனும் ஒரு நிலையினில்லாது காற்றாடியும் பம்பரமும் பிற்படச் சுழலும் மனத்தால் விளையும் பற்றுக்கள் காரணமாக வரும் பலகோடி இன்னல்களை அடைந்து, முடைநாற்றம் வீசும் இப்பொய்யுடலில் ஆன்மாவாகிய யான் புகுந்து, உய்யும் நெறியறியாது பிறவிப் பெருங்கடலுள் மூழ்கி அலைந்து கெடுமாறு என்னை இவ்வுலகில் நீ ஏன் படைத்தனை? நினக்கு யான் இயற்றிய தீங்கு யாதோ? நின்னையே இன்னானென்றறியாத பேதையேன் நினக்குத் தீங்கிழைப்பது தான் யாங்ஙனம்? என்னைப் பெருந் துயருறுத்தி நீ பெறும் பேறுதான் யாதுளது? படைக்கப்பட்ட எனக்கும் படைத்த நினக்கும் பயனற்ற இத் தொழிலில் நீ தலையிட்டதென்னையோ?" என மனக்கொதிப்புடன் விதியவனை வினாவுவேனால் அவன் கூறும் மறுமொழி யாது? 'ஓ! பேதாய் என்மேல் அடாப் பழி சுமத்தாதே, நீ சென்ற பிறவிகளில் செய்த நல்வினை தீவினைகட்கீடாக உரிய இன்ப துன்பங்களைத் துய்ப்பதற்கென இறைவனாணையின்படி யான் நினக்குடல் தருகின்றேன். இப்போது நின் துன்பத்திற்குக் காரணமானவர்கள் யாவர்? என நீயே தேர்ந்தறிவாயாக. இனி நின் சீற்றம் நின் வினைகள் மேற் செல்வனவாக" என்று கூறுவன். யான் நாணி

என் வினைகளை நோக்கி 'ஓ! பாழ்ந்த வினைகளே! நீவிர் என்பாற்றோன்றி என்னையே கெடுப்பது பெரும் பாவமன்றோ? நுங்கட்கென்னை போங்காலம்? ஏன் இவ்வாறு துன்புறுத்திப் பழி சுமக்கின்றீர்கள்? என்று கேட்கில், அவ்வசட்டு வினைகள் அறிவில்லாதவைகள் ஆகையால் மாறு கூற வகையற்றொழியும். இனியான் என் கேள்விகளைத் தொடர்ந்து யாரிடத்தில் நிகழ்த்துவது? வேறோர் வகையும் தோன்றிற்றில்லை. இவ்வினைகள் எங்குத் தோன்றி நிகழ்ந்தன? என்பாலன்றோ? என்னிடத்தன்று. உண்மையில் என்னெண்ணங்களில் உதித்தன. அவ்வெண்ணம் மனத்தின் செயலன்றோ? ஆம்! அறிந்தேன். ஏ! கேடுகெட்ட பாழ்த்த கொடிய மனக்குரங்கே! நீ செய்ததன்றோ இத்தனையும். விஷயாதிகள்மேற் பல்காற் சென்று சென்று பற்று விளைத்துத் தொழில் புரிந்தவினைகள் எனக்குப் பேரிடர் தருவது நின் அறியாமைக் குறும்பினால் ஆனதேயன்றோ? இக் குற்றத்திற்கு நீ சொல்லும் சமாதானம் யாது? விளங்கப் பொருந்த விளம்புக" என என் மனதை வினவுவனேல், அது, 'மடவோய்! நீ யாரைக் குறைகூறத் துணிந்தனை? யானோநினக்கு நேர்பட்டவன்? கழுவுக்கேற்ற கோமுட்டி கதையா பேசுகின்றாய்? யான்வாயு என்னும் பூதத்தில் பஞ்சீகரிக்கப்பட்டவன். என் இயற்கை இமைப்பொழுதும் நிலைமையின்றிச் சுழல்வது. அத்தகைய என்னை அடக்கி நடத்தக் கடமைப்பட்டது நின் அறிவு. அஃது என்னை நன்னிலையில் இயக்கின் நான் அவ்வாறு செய்திருப்பேன். தீவினை விளையாது துன்பமும் நேராது. மதங்கொண்ட யானை அங்குசத்தால் அடக்கப்படாவிட்டால், ஓடுங் குதிரையை நடத்துவோன் நடாத்தத்தவறிவிட்டால், என்னாம்? அக்கதியே நீயும் அடைந்தாய். தவறு கருதிப்பார். நின் அறிவே நின்னைக்

கெடுத்தது. என்றால் ஆயதொன்றுமில்லை. செல்க" என முறுக்காய் மொழிந்தகன்றது.

இங்ஙனம் மனம்காட்டிப் போந்த என் அறிவை முனிந்து, "அறிவெனப் பேர்பெற்ற மடமையே! நின்னால் நேர்ந்தனவே யானெய்தும் இடர்கள் பலவும். நின்னைத் துணைக்கொண்டு வாழ நம்பியிருந்தேனை வஞ்சித்தல் பெரும்பாதகமன்றோ? ஏன் இங்ஙனம் என்னை அலக்கழித்தனை? யாதுன் மறுமொழி? விரைந்து கூறுக" எனக் கடாவுவனேல், அது, "நண்ப! என்னைச் சினத்தல் அறிவன்று. உண்மையை உள்ளவாறுரைக்கக்கேள். நான் சுதந்திர மில்லேன். என்னுட்புக்கு நின்று இயக்கும் இறைவன் திருவருட்செயல் அங்ஙன மிருந்தது. ஆட்டுவிக்க ஆடும் பம்பரம்போன்று என்னை இயக்கச் செய்யும் வித்தியாதத்துவம் இறைவன் ஆணை வழிப்பட்டது. அப்பரம்பொருள் அசைவித்தாலின்றி யாதும் அசைதற்கில்லை. எங்கே தவறுபாடுளது? கூர்ந்து காணுதி. வீணே ஜடப்பொருள்களைக் குறை கூறியாவதொன்றில்லை" என்றுரைத்து மௌனங்கொண்டது. இந்நீண்ட விசாரணையினால் நான் பொருந்தியவுண்மையைத் தெற்றனவுணர்வேனானேன். இச்சான்றுகளுடன் எழுத்து மூலமான சான்றாக வேதங்களும், "எல்லா நின்செயலேயென்றும், எப்பொருளுமாகியும் அவையல்லவாகியும் நீயே மாயம்புரிகின்றா" யென்றும் உரைக்கின்றன. ஆதலால், ஒன்றைத் தாங்கிநிற்கும் ஆதாரப் பொருளும் அதனை இடமாகக்கொண்டு நின்றுவிளங்கும் ஆதேயப் பொருளும், நீயேயென்று கண்டேன். என்னை ஆட்டியான ஆடலைக் கண்டு நிற்பவனும், என்னோடொக்க நின்றாடுகின்றவனும் அம்பலத்தாடும் ஒருநீயே! மோனமுற்றுணரும் ஞானத்தின் காட்சிப் பொருளும், உயிர்க்குலங்கட்கு மாறாது கருணை சுரந்து அளிக்கும் வள்ளற்பெருமானும், ஈன்றெடுத்த அன்னை தந்தை முதலாய சுற்றத்தாரும், ஏனை எனக்கினிய

எல்லாப் பொருள்களும் நீயேயாகின்றனை. இங்ஙனமிருப்ப என்பாற் றவறுபாடு யாதெனத் தெளியகில்லேன். ஆயின், ஒன்றுளது. நீ இங்ஙனம் எல்லாம் செய்கின்றனை என வுணராமை குற்றமாகலாம். எனினும், அதுவும் நின் திருவருளுணர்த்தினன்றி யானுணர்தல் கூடாமையின் பொருந்தாது. எங்கும் நிறைந்து எல்லாத் தத்துவ தாத்துவிகப் பொருட்களுமாய், என்று முள்ளவனாய், எவற்றையும் கருவியின்றி யுணர்பவனாய், இன்பமே வடிவானவனாய் விளங்கும் பசுபதியே! என் குற்றமென்று சொல்லற்கியலாத நிலைமையில் என்னைத் துன்பங்கள் வந்து வருத்தல் ஏனோ? கூறுக' என்னும் இப்பொருளில் இறைவனது சுதந்திரத் தன்மையும், உயிர்களின் உணர்த்த உணரும் பாரதந்திரியமும், பிறவியால் வரும் ஏதங்கள் வினையால் விளைவன வென்பதூஉம், அவ்வினைகளும் மனத்தின் சங்கற்ப விகற்பங்களால் உளவாதலாலும், மனத்தை அடக்கி நடத்தும் பொறுப்பு அறிவின் மேலதாதலும், அவ்வறிவும் தன்வயத்ததல்லாமையும் எல்லாம் இறைவன் திருவருள் வலியால் நிகழ்கின்றனவென்றுணர்ந்து யான் எனதென்னும் செருக்கற்று அம்முழுமுதற் கடவுளின் அருளை நெக்கு நெக்குருகி இடைவிடாது நினைந்துய்ய வேண்டுமேயன்றி வேறு வழியில்லை யென்பதூஉம் மிகவும் வலியுற எடுத்து விளக்கப் பெற்றமை காண்க. இவ்வுண்மையையே நம் திருவருட்பிரகாச வள்ளலார்,

> "நினைப்பித்தாய் நித்தா நிமலா வெனநீ
> நினைப்பித்தா லேழை நினைப்பேன்—நினைப்பின்
> மறப்பித்தால் யானும் மறப்பேன் எவையும்
> பிறப்பித்தாய் என்னலென் பேசு."

என அருள்வாராயினர்.

> "சிவன் செயலாலே யாதும் வருமெனத் தேறேன்"
> உளவறிந் தெலாமுன் செயலாமென வுணர்ந்தோர்க்
> களவிலா னந்த மளித்தனை யறிவிலாப் புன்மைக்
> களவு நாயினேற் கிவ்வண மமைத்தனை......"

என இவ்வரும் பொருளையே ஆசிரியர் பிறண்டும் கூறிச்செல்லுதலுமறிக.

இவற்றாற் போந்த வுண்மை, ஆகாமியம் பிராரப்தம் சஞ்சித மென்னும் மூவகை வினைகளினும், பிராரப்த வினை துய்த்தே கழிக்கற் பாலதாகலானும், சஞ்சிதம் ஞான முதிர்ந்தவழிப் பற்றறத்தொழிவதாகலானும், பெரியோர் குறிக்கொண்டு நீக்க முயல்வது ஆகாமிய மொன்றனையே. அதுதானும் 'நான் செய்கின்றேன்' 'இஃது எனக்குரியது' என்னும் அகங்காரத்தால் ஏறுதலின், 'என்னாலாய தொன்றுமின்று, என்னை நடாத்தும் எம்பெருமான் அருள்வழி நேர்வனவே எவையும்' என்னும் மெய்ம்மையுணர்ந்து அம்முதல்வன் பேரருளைக் கணமும் மறவாது நைந்துருகிக் கண்ணீர் பெருகத் தன்முனைப்பின்றி ஏற்றபெற்றி ஒழுகி அவ் ஆகாமிய வினையை அறமாற்றி இறைவன் திருவடிப்பேறு பெறலாமென்பதாம்.

தமிழர் மதவளர்ச்சி

[அ. மு. பரமசிவானந்தம்]

தமிழர் நாகரிகமானது குமரியின் தென்பால் பஃறுளி நதியின் உயர்ந்த வருகையால் செழித்தோங்கிய காலமுதற் கொண்டு மேம்பட்டு வருகின்றது. பெரிய ஜலப்பிரளயம் தோன்றி அநேக மலைகளையும் பஃறுளி நதியையும் அதைச் சார்ந்துள்ள நாற்பத்தொன்பது நாட்டையும் கொள்ளை கொள்வதற்கு முன்பு பாண்டியன் மாகீர்த்தி என்பான் அந்

நாடுகளை ஆண்டுவந்தான். அவன் சிறப்பைச் சிலப்பதிகாரம் தெற்றெனப் புலப்படுத்தும்.

> 'வடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
> வடிவே லெறிந்த வான்பகை பொறாது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங் கடல்கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
> தென்றிசை யாண்ட தென்னவன் வாழி'

இதிற் றென்திசை யாண்ட தென்னவனே பாண்டியன் மாகீர்த்தி என்பான். பாண்டியரின் இரண்டாம் தலைநகராகிய கபாடபுரம் செல்வத்திற் சிறந்ததாயும் நவரத்தினங்களும் பொன்னும் நிரம்பப்பெற்றதாயும் பாண்டியரின் இரண்டாம் தலைநகராயும் விளங்கிற்று. இதன் பரப்பை இந்துமகா சமுத்திரம் உட்கொண்டது. பாண்டியரது அரசியல் நடைபெற்ற தென்மதுரை இன்னும் தெற்கிலிருந்தது. அதுவும் முதலாம் ஊழியின் இறுதியில் அழிவுற்றது. பாண்டியன் மாகீர்த்தி அரசியலைப்பற்றி நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிரத்தில் கூறிய வரலாறு இது.

> 'பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானாதலின் அவனும் அவன் அவையிலுள்ளாரும் அறிவு மிக்கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட் டாசிரியர் கூறிய கடாவிற்கெல்லாம் விடைகூறுதலின் 'அரிறப' என்றார்'.

இதிலிருந்து பாண்டியன் மாகீர்த்தி 24,000 ஆண்டுகள் நீண்ட அரசியற்றினான் என்பது புலப்படும். அவ்வாறு 24,000 ஆண்டுகள் ஆண்டது உண்மையாயின் அவனும் அந்நாட்டு அறிஞரும் அறிவால் விளங்கியது விநோதமன்று. அப்படி இருந்தும் சராசரி 70 ஆண்டுகளளவே நிலைத்து நிற்கும் மிகச் சிறிய ஆயுளையுடைய நாம் ஓர் அரசன் அவ்வளவு நீண்டகாலம் அரசாண்டான் என்று மயக்கமாகிய

ஒழுங்குமுறையைக் கற்பித்த அவ்வாசிரியராய நச்சினார்க்கினியர் கூறியதைக் கவனிக்க மறுக்கின்றோம். சரித்திர ஆராய்ச்சிக்குரிய இக் கர்ணபரம்பரையான கதை ஒவ்வாது போயினும் அதனுடைய உண்மையையும், பொருளையும் ஆராயின் வெறுப்பாகத் தோன்றாது. இதற்கொத்த சமேரியர்களுடைய சரித்திரக் கதைகள் அவ்வாறு இருப்பது இயற்கை என்று ஒத்துக்கொள்ளுகின்றன.

"லார்சா' என்னும் அரசனுடைய வரிசையில் ஜலப்பிரளயத்துக்குமுன் எட்டுஅரசர்கள் 18600-க்கும் 43200 ஆண்டுகட்கும்மத்தியில் ஆண்டார்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மெசபொடோமியா பள்ளத்தாக்குகளின் நாகரிகம் ஒரு தனிக் கிளர்ச்சியை உண்டாக்கும். ஏனெனில் அவர்கள் பழைய சமேரியர்களுடையதும், தமிழர்களுடையதுமானவை போன்ற கதைகள் பல கூறுகின்றனர். கி. மு. 3100-2920-க்குள் ஆண்ட முதல்வம்சாவளிக்குப் பொருந்திக் கண்டுபிடித்த சில சாசனங்கள் அந்தச் சமேரியன் விட்டுப்போன கதைகள் எல்லாம் கர்ணபரம்பரை என்று கூற இயலாதென ஒரு போக்காக நிரூபிக்கின்றன. புராதனப் பொருளாராய்ச்சியாளரால் (ஆந்த்ரோபாலஜிஸ்ட்) ஆரப்பா மோகினிதாரா என்னும் இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் சமேரியர்களுக்கும், திராவிடர்களுக்கும் உள்ள வம்ச சம்பந்தத்தையும், வளர்ச்சி சம்பந்தத்தையும் அவர்களுடைய நாகரிகங்களையும் சற்று தெளிவாக விளக்குகின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று அல்லது நான்கு நூற்றாண்டில் இருந்த பெரூசஸ் எழுதியதிலிருந்து சமேரியர்கள் கடல் மூலமாக நாகரிகங்களுடன் தமிழ் நாட்டைச் சேர்ந்தார்கள் என்று எண்ணப்படுகின்றது. அந்நாகரிகமே குமரிக்குத் தெற்கே இருந்த தமிழ்நாட்டிற் பரவி ஓங்கியிருந்தது போலும்.

கும் ஆரிய திராவிட சம்பந்தத்தை விளக்குவதாக வெளிப் படையாக்கிவிட்டது.

சங்க நூல்கள் எனப்பட்டவைகளிலிருந்து தமிழகத்தினுடைய பழைய ஆராய்ச்சிகளையும் ஆசாரங்களையும் அறியலாம். அவைகளே ஏற்ற சான்றுகளாகும். சென்ற நாற்பது வருடங்களாக ஓலைகளில் எழுதி வைக்கப்பட்டிருந்த அந்நூற்களை (பழையவற்றை) தமிழ்நாட்டு அறிஞர்கள் பிரபலமுறச் செய்தனர். அவைகள் ஒரு புதிய உலகத்தை ஏற்படுத்திவிட்டன. அவைகள் தெய்வங்களை ஒத்த மானுடவர்க்கத்தவரும், திடகாத்ரமுள்ளவரும், கூர்மையான அறிவையும், வீரத்தையும், சுறுசுறுப்பையும், தைரியத்தையும் உடையவரும் நாமென்றன. அவை உருவாலங்காரமாகிய தியானத்தை ஈந்திலஎன்று தெரிகின்றது. அந்தப் பழைய காலத்தவர் ஊக்கமுள்ளவர்கள். யுத்தங்களிலாவது, ஆன்மசாந்தமாகிய தொழிலிலாவது முறையான தியானங்களிலும், சளைக்காத வீரத்திலும் வெற்றி பெற்ற வீரர்களின் நினைவுக் குறிக்கென அவர்களுக்குப் பிறகு அவர்கள் உருவங்களை அமைத்தல் வழக்கம். இவ்வுலகில் கவிகளால் புகழப்படும் வீரனுடைய உயிர், பிறகு தேவ உலகத்திற்கு உயர்ந்த விமானத்திற் செல்லும். தமிழர்களுடைய நாகரிகம் நிறைந்த பழைய சிறப்புள்ள காலமானது மதத்தினது வீரத்திற்கே சிறந்து நின்ற காலமாகும். இந்நாடு அக்காலத்தே ஊக்கமுள்ள வீரச்செயல்கட்கும், அற்புதங்கட்கும், புகழின் இருப்பிடத்திற்கும் ஏற்றதாய் விளங்கிற்று.

உதயகால சூரியனை ஒத்த செவ்வேளாகிய யுத்தக் கடவுளென்னும் முருகனை ஆதிகாலந் தொட்டு அழியாத அருஞ் செய்கையுள்ள உருவமாக வைத்து வழிபட்டார்கள். அவனுடைய தாயாகிய சக்தியைத் தமிழ் வீரர்கள் யுத்தகளங்களில் காப்பாற்ற வேண்டிப் போற்றினர். அவளே பிரசித்திபெற்ற

*கொற்றவை எனப்பட்டாள். இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னு முக்காலங்களையும் தங்களுடைய மனதிலடக்கி ஆற்றல் அறிந்து சொல்லப்பட்ட அறிவர் என்னும் தத்துவ சாஸ்திரிகள் அக்காலத்திருந்தனர். தவிர, பல அரிய தவங்களைச் செய்யும் தாபதரும் அக்காலத்திருந்தனர். அவர்கள் இருவரும் உண்மை நிலையை அறிய வேண்டுவதே தங்கள் முக்ய வேலை என்று †உண்மையானவனும், பிறப்பற்றவனுமாகிய சிவனைப் பூசித்தார்கள். உண்மை வழியினின்று மாறியவர்களை அறக் கடவுள் கோபக் கடவுள் உருவங் கொண்டு அழிக்கும். நீலநிறமுள்ள மாயோன் என்பவன் புகழுக்கு இருப்பிடமாயுள்ளவன். இந்திரனும், வருணனும் அரைக் கடவுளராகவே (Demi Gods) எண்ணப்பட்டனர். மாயோனின் சகோதரனாய வாலியோன் என்பவன் சங்கு போன்ற வெண்மை நிறமாய முகமுடையவன். அவன் இணையற்ற வீரத்திற்கு இருப்பிடமானவன். தொடித்தோட் செம்பியன் என்னும் சோழன் தேவர்களுக்கு உதவி செய்வதற்காக ஆகாயத்தில் அசைந்துகொண்டிருந்த அசுரருடைய மூன்று எயில்களை எறிந்தான் என்று சொல்லப்படுகின்றது. தேவ அரசன் அவ்வாறு செய்த சோழனது நட்பை எண்ணி நன்றி பாராட்டக் கருதி அந்நாட்டின் தலைநகருக்கு வருடத்

* 'நீடோளான் வென்றி கொள்கென
நிறைமண்டை வலனுயரிக்
கூடாரைப் புறங்காணுங்
கொற்றவை நிலைஉரைத் தன்று.'

'ஒளியின் நீங்கா விறற்படையோ
ளளியின் நீங்கா வருளுரைத் தன்று.'

—புறப்பொருள் வெண்பாமாலை.

† 'அரிதென மாற்றான் வாய்மைய னாதலின்.'

—பரிபாடல் - 5 - 33.

திற்கு ஒருமுறை வருவதாகவும், இருபத்தெட்டு நாட்கள் அவனைக் குறித்து நடக்கும் ஒரு விழாவில் தானும் கலந்து கொள்ளுவதாகவும் வாக்களித்தான். அதுவே இந்திரவிழாவின் வரலாறு.*

(தொடரும்)

தடுத்தாட்கொண்ட புராணம்

ஓர் ஆராய்ச்சி

[திக்கம் - சி. செல்லையாபிள்ளை எழுதியது]

“ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.”

(இ - ள்) சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்தே திருவருட் டிருமேனிகொண்டு நின்று திருநிருத்தஞ் செய்தருளும் ஸ்ரீ நடராஜப் பெருமானை எம்பிரான் தோழராகுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தரிசித்தபொழுது பேரறிவாந் தன்மையினவாய காண்டல், கேட்டல், உண்டல், உயிர்த்தல், உறுதல்களானறியப்படும் ஐம்புலன்களும் அப் பிரானாரது கருணைத் திருவுருவிற் றிளைத்தமையான் முற்றறிவாமியல்பினவாகத் திருந்திய கண்களே கொண்டு நிற்ப; அஃதங்ஙனமாக அளத்தற் கரிதாய் அளவிறந்த அன்பாய்த் திகழ்ந்தனவாகிய மனம், சித்தம், அகங்காரம், புத்தி எனப்படும் அந்தக் கரணங்கள் நான்கும் அந்நிலையினின்றுந் திருந்திய அவச நிலையதாகிய அன்பேயாக; விரிந்த செயலினவாய்ச் சாத்துவித வியல்பினவாய் நின்ற தாமதம், இராசதம், சாத்துவிகம் ஆகிய முக்குணங்களும் அவ்வன்பின் செயலாய்த் திருந்திய சாத்துவிகமேயாக; ஞானசந்திரன் வாழுந் திருச்சடையினையுடைய நடராஜ வள்ளலார் நடித்தருளும் படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல் எனப்படும் நாற்றொழிலின் பயனாய் வந்த அருளானாய பேரின்ப வெள்ளத்திலழுந்தி ஒப்பிலா இன்புருவால் விளங்கினார் என்பது. கொள்ள, ஆக, ஆக, திளைத்து, மலர்ந்தார் என முடிக்க.

அருணிலையாகுந் துரியாவத்தையினின்று சுகப்பிரபை மாத்திரையே விளங்கப்பெற்றவராகிய எம்பிரான்தோழர் அதீதநிலையை யடைந்து சிவத்துவவிளக்கமென்னும் பரம சுகந் தலைக்கூடி நின்றார் என்பதாம்.

பேர் ஐந்து அறிவுந்திருந்து கண்களே கொள்ள, அளப்பருங் கரணங்கள் நான்குந் திருந்து சிந்தையேயாக, ஒரு குணம் மூன்றுந் திருந்து சாத்துவிகமேயாக, இந்துவாழ் சடையானாடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின் வந்த பேரின்பவெள்ளத்துட்டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் எனக் கூட்டுக.

கண் முதலியன ஞானேந்திரியமாம். புத்தியானது அறிவு சீவித்தற்கும், சிந்தை அல்லது மனமானது அன்பு சீவித்தற்கும், குணமானது செயல் சீவித்தற்குமிடமாம். அங்ஙனமாக

*‘ தூங்கெயி லெறிந்த தொடிதோட் செம்பியன்
விண்ணவர் தலைவன் வணங்கிமுன் நின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
அமரர் தலைவ னுங்கது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவ ராகலின்.’
—மணிமேகலை விழாவறைகாதை - 4-10

சுந்தரமூர்த்தி சுவாமிகளது அறிவிச்சை செயல்கள் மூன்றும் சச்சிதானந்த சொரூபியாகிய சிவத்தையே விடயிக்க அப்பிரானாரது தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனப்படும் எண்குணங்களுந் தன்குணங்களாயடங்கி இன்புருவாய் விளங்கினார் என்பதாம்.

எம்பிரான் தோழராகும் எம்மையாளுடைய நம்பிகள் சிவயோக பரம்பரையினராதலின் அவரது ஞானேந்திரியங்கள் ஐந்தும் வியாபகவியல்பினவாய் விளங்கின என்பார், "ஐந்து பேர் அறிவும்" எனவும், அவ்வழி நிகழுமறிவானெய்தப்பெறும் இச்சையும், பந்தித்தல், சிந்தித்தல், அறிவானெழுதல், துணிதல் என அளவின்பாற்படாது அவிழ்ந்த அன்பாய் நிகழ்ந்ததென்பார் "அளப்பருங் கரணங்கள் நான்கும்" எனவும், தாமதம், இராசதம், சாத்துவிகம் எனப்படும் முக்குணங்களும் சாத்துவிக நிலையினவாய என்பார் 'குணம் ஒரு மூன்றும்" எனவும் அங்ஙன மருணிலையினின்று தொழிற்பட்டனவாகிய அறிவிச்சை செயல்கள் மூன்றும் சுகாதீத நிலையை எய்தினவென்பார் " திருந்து கண்களேயாக " "திருந்து சிந்தையேயாக" " திருந்து சாத்துவிகமேயாக" எனவும், அப்பெற்றித்தாய் சுகாதீதநிலை படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தலாகிய நாற்றொழிலின் பாற்பட்டுப் பிறவிப் பெருங் கடலில் வீழ்ந்து நாழிகை வட்டமுங் கறங்கும் போலச் சுழன்று சுழன்று அடிபட்டு அடிபட்டு ஆணவமல சத்தி அணுவணுவாய்த் தேய்ந்து தேய்ந்து சென்று பரிபாக மடைந்து இருவினையொப்புஞ்சத்திநிபாதமு மெய்திய பின் அருளானெய்தப்படுவதாக, அதனை யருணிலையினின்ற சிவயோகராதலின் நடராஜப் பெருமானது ஐந்தொழில் நடாத்து மருட்டிருமேனியைத் தரிசித்த மாத்திரையான

டைந்தார் என்பார் " இந்துவாழ் சடையானாடு மானந்த வெல்லையில் தனிப்பெருங் கூத்தின் வந்த " எனவும், அந்நிலையே பரமசுகம் என்பார் " பேரின்பம் " எனவும், அத்தன்மைத்தாய பேரின்பம் அளவிகந்த வியல்பினதென்பார் "வெள்ளம்" எனவும், அத்தகைய பேரின்ப வெள்ளத் தழுந்தி அதனையே விடயித்து நின்றார் என்பார் "திளைத்து" எனவும் அங்ஙனந் திளைத்ததனாய வின்பம் பிறிதொன்றனோடு முவமிக்கப்படாத பெருமையினதென்பார் "மாறிலா மகிழ்ச்சி" எனவும், அப்பரிசாய மாறிலா மகிழ்ச்சியிடத்து அதனை யறிந்த தானுமின்றி அவ்வின்பாய்நின்ற தலைவனுமின்றி இன்பேதானாய்நின்றார் என்பார் "மலர்ந்தார்" எனவுங் கூறினார். "மாறிலாமகிழ்ச்சி" என்பதற்குத் துன்பம் மாறாது இன்பேயாய் நிற்கும் மகிழ்ச்சி எனினுமாம்.

ஆன்மாக்கள் தநுகரணங்களோடு தோற்றுதலால் மலபரிபாகமும், மலபரிபாகத்தால் ஆனந்தமுமெய்துதலின் அத்தோற்றத்தைச் செய்யும் இறைவனது கூத்து "ஆனந்தக் கூத்து" எனவும், பரசிவமாயினார் ஆன்மாக்கள் மீதுகொண்ட கருணையாகிய பராசத்தியின் சந்நிதியில் சங்கற்பமாத்திரையானிகழுந்தொழில் அதிகாரமுதல்வர்களானடாத்தப்படும் முத்தொழிலையும் பிரேரித்து ஆதியும் முடிவுமில்லா அற்புதத் தனிக்கூத்தாய் என்றும் ஒரு பெற்றித்தாய் நிற்றலின் அந்நீர்மைத்தாய திதி "எல்லையில் கூத்து" எனவும், சர்வசங்காரகாலத்து எல்லாப் பொருளுந் தம்மாட்டு வியாப்பியமாயொடுங்கிநிற்பத் தாந்தனித்து நிற்றலின் அக்கூத்து "தனிக்கூத்து" எனவும், நால்வகைத்தோற்றமும், எழுவகைப்பிறப்பும், எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதமுமுள்ள ஆன்மாக்கள் தோற்றுதற்கும், முத்தொழிற்குங் காரணமாய் ஆன்ம அறிவு முழுவதையும் மறைத்து நிற்கும்

மலசத்தி சடலமாதலின் அதனைத் தொழிற்படுத்தும் இறைவனது கூத்து "பெருங்கூத்து" எனவும் பட்டது.

ஸ்ரீநடராஜப் பெருமான் ஐந்தொழில் நடத்துமியல்பை

"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்னுஞ் செய்யுளிற் காண்க.

ஊன்று மலர்ப்பதத்தில் ஊற்றமாயுற்ற திரோதம் என மாறுக. ஊற்றமாய் உற்றதிரோதம் = ஏகதேசமல்லாத முழு மறைப்பு.

இனி நடராஜப் பெருமானது திருமேனி அருளுருவமென்பதும், திருச்சிற்றம்பலம் பரஞான ஞானகாசமென்பதும்,

"கற்பனை கடந்த சோதி கருணையே வுருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி"

என்னுஞ் செய்யுளாற் பெற்றும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருணிலையினின்ற சிவயோகிய ரென்பது,

"பாசமாம் வினைப்பற்றறுப் பான்மிகு
மாசைமேலு மொராசை யளிப்பதோர்
தேசின்மன்னி யென்சிந்தை மயக்கிய
ஈசனாரு ளெங்கெறிச் சென்றதே"

என்னுஞ் செய்யுளானும், இதுபோன்ற ஏனைய செய்யுட்களானும் பெற்றும்.

சிவயோகம்—சிவத்தோடு கூடுதல். சிவயோகம், அருணிலை, (சுத்தாவத்தையில்) துரியநிலை, சாக்கிராதீதம் என்பன ஒருபொருட்கிளவி.

உம்மைகள் முற்றேடு எண்ணுமாம். ஏகாரங்கள் பிரிநிலையுந்தேற்றமுமாம்.

[இச்செய்யுட்குப் பலவேறு வகைப்பட்ட முத்திநிலைக் கியையப் பலப்பல பொருள்கூறக் கிடைப்பினும் எம்மையாளுடைய நம்பிகளது சிவயோகமாகிய அருணிலைக்கேற்ப இங்ஙனம் பொருள்கூறுதல் சிறப்புடைத் தெனக்கொண்டாம்.]

இந்து சாதனம்.

ஆரூரர் அன்பு

[பெ. கோவிந்தமூப்பனார்]

ஆரூரர், நாயன்மார்களில் ஒருவராகிய சுந்தரர். நாயன்மார்கள் சிவபெருமான் ஒருவனையே வழிபாட்டாலும் பற்பலரும் பற்பல முறையிலேயே வழிபட்டிருக்கின்றனர். ஆரூரர் சிவபெருமானுக்கு எவ்வாறு அன்பு செலுத்தி வழிபட்டார் என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

அன்பாவது தன்னால் விரும்பப்படுவாரிடத்தே தோன்றும் உள்ள நிகழ்ச்சி. அன்பு அதனைச் செலுத்துவோர் வேறுபாட்டால் நான்கு வகைப்படும். அவை அடிமையன்பு, மகவன்பு, நட்பன்பு, மெய்யன்பு. இவற்றைத் தாசமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று வடநூலார் கூறுவர். அடிமையன்பாவது இறைவனைத் தலைவனாகக் கொண்டு, வழிபடுவோன், தான் அடிமை முறையில் வழிபடுதல். அடிமையன்பைப் பின்பற்றியவர் திருநாவுக்கரசு நாயனார் என்ப. மகவன்பாவது இறைவனைத் தந்தையாகக் கொண்டு, வழிபடுவோன், தான் மகவு முறையில் வழிபடுதல். மகவன்பைப் பின்பற்றியவர் திருஞானசம்பந்தர் என்ப. நட்பன்பாவது இறைவனைத் தன்னேடொத்த நண்ப

னாகக் கொண்டு, வழிபடுவோன் தான் நண்பன் முறையில் வழிபடுதல். நட்பன்பைப் பின்பற்றியவர் சுந்தரர் என்ப. மெய்யன்பாவது வழிபடுவோன் இறைவனை மெய்யுணர்வால் வழிபடுதல். மெய்யன்பைப் பின்பற்றியவர் மாணிக்கவாசகர் என்ப.

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை நண்பன் முறையில் வழிபட்டவரென்று சொல்லப்பட்டாலும், அவருடைய வாழ்க்கையில் முதலில் செலுத்திய அன்பிற்கும், இடையிற் செலுத்திய அன்பிற்கும், இறுதியிற் செலுத்திய அன்பிற்கும் வேறுபாடு காணப்படுகிறது. வெண்ணெய் நல்லூரில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதிலிருந்து திருவாரூரை அடையும் வரை நாயனார் இறைவனுக்கு ஆட்படுதலில் கருத்தைச் செலுத்தி அன்பு செய்கின்றார். திருவாரூரில் பரவையாரை மணந்ததிலிருந்து திருவொற்றியூரை அடையும்வரை உலகப் பொருள்களில் கருத்தைச் செலுத்தி அவற்றைப் பெறுவதற்கு இறைவனை வழிபடுகிறார். திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்ததிலிருந்து திருவடிப் பேறுவரை தங் காரியங்களுக்கு இறைவனைப் பயன்படுத்திக் கொள்வதில் கருத்துச் செலுத்தி வழிபடுகிறார்.

நாயனார் திருவெண்ணெய்நல்லூரிலேயே முதல்முதலாகச் சிவபெருமானுக்கு அடிமைப்படுகிறார். அடிமைப்பட்டு அங்கு அவரால் பாடப்பட்ட பதிகம் “பித்தாபிறை” என்பது. அப்பதிகத்தில் “நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாய்த் திரிந்தெய்த்தேன்” என்று கூறி அடிமைப்படுவதற்கு முன்னுள்ள தம் நிலைமையைத் தெரிவிக்கிறார். “கொடியேன்பல பொய்யே யுரைப்பேனைக் குறிக்கொள் நீ” என்று கூறித் தம்மை மேலும் ஆட்கொள்ளுமாறு இறைவனை வேண்டிக்கொள்கிறார். “அத்தாவுனக்காளா யினியல்லேனெனலாமே” என்று கூறி, இறைவன் தம்மை ஆட்கொண்டமையாலும், அவனுக்குத் தாம் ஆட்பட்டமையாலும், இனித் தாம் அவனுக்கு அடிமையன்று என்று சொல்வதற்கில்லை என்றும், சிவபெருமான் தமக்கு ஆண்டவனென்றும், தாம் அவனுக்கு அடிமை என்றும் தெரிவிக்கிறார்.

நாயனார் சிவபெருமானுக்கு ஆட்பட்டமையால் அவர் தம்மணக் கோலத்தைத் துறந்தார். உற்றாரும் பெற்றாரும் இம்மையில் துணைவர்போல் காணப்பட்டாராயினும் மறுமைக்குத் துணைவராகமாட்டாரென்றும், இடமும் பொருளும் ஏவலும் இம்மைக்கு இன்றியமையாதனவாயிருந்தாலும் அவை மறுமைக்குத் துணையாதலில்லை என்றும், துணையாகாத பொருள்களைத் துணையாகக் கொள்ளுதல் அறியாமையாகுமென்றும், இறைவனே தம்கண்முன் ஆவணங் காட்டி ஆட்கொண்டமையாலும், மறுமைக்குத் துணையாயிருப்பதாலும், அவனை அடைதலே அறிவுடைமையாகும் என்றும் எண்ணி நாயனார் தாம் இருந்த வூரைவிட்டு நீங்கிச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பலவூர்களுக்கும் செல்ல எண்ணினார். துறையூரை யடைந்து பருகா அமுதைக் கண்களால் பருகிப் பவநெறியைப் போக்குவதற்குத் தவநெறி தந்தருள வேண்டுமென்று மனத்தில் கொண்டு “தலைவாவுனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே” என்று வேண்டிக் கொள்கிறார்.

ஆரூரர் துறையூரை யகன்று திருத்தினை நகரை யடைந்து, கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானைப் பாடி வணங்குகையில், அப்பெருமானை அடையுமாறு தம்நெஞ்சிற்கு அறிவுறுத்துகிறார். துறையூரில் “தலைவாவுனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே” என்று தவநெறியில் விருப்பங் கொண்டவர், மனத்தில் மாசு கொண்டு, வெளியில் சடையும் எலும்பும் அணிந்து தவவேடங் காட்டிச் செய்கையில் தவச் செய்கை செய்தலின்றி அவச் செய்கை செய்வதால் பவக்கடலைக் கடக்க இயலாது; தவக்கோலமின்றியும் முழுமுதற் கடவுளை நினைத்து வணங்குவதனால் அதனைக் கடக்கலாம் என்று நாயனார் தம் நெஞ்சிற் கறிவுறுத்தலை இவ்வூர்ப் பதிகத்தினால் அறியலாம்.

தன்னில்ஆசறு சித்தமு மின்றித்
தவமுயன் றவமாயின பேசிப்
பின்னலார் சடைக்கட்டி என்பணிந்தால்
பெரிது நீந்துவதரிது; அதுநிற்க,

முன்னெலாம் முழுமுத லென்றவானோர்
    மூர்த்தியாகிய முதல்வன் தன்னைச்
செங்நெலார் வயல்திருத் தினைநகருட்
    சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே.

தவவேடம் வெளிவேடமாதலின், சுந்தரர் வெளிவேடத்தில் விருப்பங் கொள்ளவில்லை. உண்மைத் தவ ஒழுக்கத்தில் ஒழுக அவர் நண்ணுகின்றார். இல்லறத்தி னீங்கித் துறவறத்தை அடைந்து போலி வேட முதலியவற்றை வெறுத்து இறைவனை அடைவதற்குச் சில நேர்முறைகளைத் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார். அம்முறைகள் நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்பன. தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் வீடடைவதற்கு இல்லறம் துறவறம் என்ற பிரிவுகளும், துறவறத்தில் விரதம் ஞானம் என்ற பிரிவுகளும் ஞானத்தில் நிலையாமை, துறவு மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்ற பிரிவுகளும் அமைத் திருத்தல் ஆராயத்தக்கது. நிலையாமையாவது உலகம், உயிர், கடவுள் என்ற முப்பொருள்களில் உயிர் உலகங்களினது தோற்றத்தையும், இருப்பையும், அழிவையும் ஆராய்தலும், அவற்றை ஆராயு முகத்தால், அவற்றைச் செய்கின்ற கடவுளினது தோற்ற மின்மையையும் அழிவின்மையையும் ஆராய்தலுமாகும். ஓடி ஆடித் தேடிய பொருளும், உணவு முதலியவற்றால் வளர்த்து உடையணி முதலியவற்றால் அழகுசெய்து பேணிய உடம்பும், உள்ளபோலக் காணப்பட்டு மறைதலின், நாயனார் பொருள் நிலையாமையைக் குறித்தும், யாக்கை நிலையாமையைக் குறித்தும் தந்நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார்.

"ஒன்றலா உயிர் வாழ்க்கையை நினைந்திட்டு
    உடல்தளர்ந் தருமாநிதி இயற்றி
என்றும் வாழலாம் எமக்கெனப் பேசும்
    இதுவும் பொய்யெனவே நினையுளமே"

"பரிந்த சுற்றமும் மற்றுவன் துணையும்
    பலருங்கண் டழுதெழ உயிருடலைப்
பிரிந்து போமிது நிச்சயம்......
    சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே"

என்ற செய்யுட்களால் அறிக. (தொடரும்)

தக் கிணற்றிற்கிடந்த குடத்தை மேலே நின்றெடுக்க அக்குடங் கரையேறிய தன்மைபோலக், கர்த்தா நின்று கன்மத்தைத் தொலைவித்து மேலாகிய வீடுபேற்றைக் கொடுக்கவேண்டும்; அப்படிக் கொடுப்பான் சிவன் ஆகையால் அந்தச் சிவனையே தெய்வமாகக்கொண்டு அவனருளிய வேதாகமங்களின் திறமாகிய சரியை கிரியா யோகஞானங்களிலே நீயும் நிற்பாயாக. கச

ஆசீவகன் மதம்

என்உயி ரதற்குப் போல எவர்க்கும்ஒத் திருப்பன் என்று
தன்னுயிர் வருந்தத் தானும் தலையினைப் பறித்துப் பார்மேல்
மன்உயிர் எவற்றி னுக்கும் வருந்தவே அறங்கள் சொல்லும்
அன்னதோர் வாய்மைஆசீ வகன்அம ணர்களிற் கூறும். கரு

(உரை) எனதான்மாவுக்கு யான் கிருபைசெய்யுந் தன்மைபோல எல்லா ஆன்மாக்களுக்கும் யான் கிருபைசெய்திருப்பனென்று சொல்லின், தன்னுடைய ஆன்மா வருத்தப்படத் தன் தலைமயிரைப் பறித்து, உலகின்கண் நிலைபெற்ற ஆன்மாக்கள் எல்லாவற்றினுக்கும் வருத்தம் உறுவதுவே அறங்களாகச் சொல்லுமென்னுந் தன்மையாகிய சொல்லை அமணர் இருவகையாரில் ஆசீவகன் சொல்லும். க

வரம்பிலா அறிவன் ஆதி வைத்தநூற் பொருள்கள் தாமும்
நிரம்பவே அணுக்கள் ஐந்து நிலம்புனல் தீகால் சீவன்
பரந்திவை நின்ற பான்மை பாரது கடினம் சீதம்
தரும்புனல் சுடும்தீ வாயுச் சலித்திடும் உயிர்போ தத்தாம்.

(உரை) அநந்தஞானனாகிய அருகபரமன் ஆதியிலே உண்டாக்கப்பட்ட நூலிற் பொருள்கள்தாமும் பூரணமாக ஆன்மாக்கள் ஐந்தென்றுகூறும்; அவையாவன,—பிருதிவி அப்புதேயு வாயு ஆன்மா. அவ்வான்மாக்கள் ஐந்தும் விரிந்துநின்ற முறைமை சொல்லிற் பிருதிவி கடினமாம், அப்பு சைத்தியமாம், அக்கினி உஷ்ணமாம், வாயு சலநமாம், ஆன்மா போதத்தை யுடைத்தாம். உ

பார்புனல் பரக்கும் கீழ்மேல் படர்ந்திடும் தேயு வாயுச்
சேர்வது விலங்கின் உள்ளம் அவற்றொடும் சேரும் வேறு

சார்வது பெற்ற போது சார்ந்தஅப் பொருளின் தன்மை
நேர்வது மாகி நிற்கும் இதுபொருள் நிகழ்த்து மாறே. ௧௬௭

(உரை) பிருதிவியும் அப்புவும் கீழே விரிவை யுடைத்தாய் நிற்கும். தேயுவும் வாயுவும் மேலே விரிவை யுடைத்தாய் நிற்கும். ஆன்மாவானது காயத்தோடுஞ் சேருஞ் சேர்வையை நீங்கினாற் பிருதிவி அப்பு தேயு வாயுவாகிய நாலான்மாக்களோடுங் கூடி நிற்கும். இவற்றை வேறுபடக் காயத்தைச் செறிவாகப் பெற்றவிடத்துக் காயத்தை இடமாகக்கொண்டு அதனது தன்மை தானாகப் பொருந்தி நிற்கும். இது பஞ்சான்மாக்கள் செய்தியைச் சொல்லும் வழி. ௫

உணர்தரா அணுக்கள் நான்கும் ஒன்றுகெட் டொன்ற தாகா
புணர்தரா ஒன்றில் புக்கொன் றாயினும் பொருந்தி வாழும்
அணைதரா புதிய வந்திங் கழிதரா பழைய வான
இணைதரா ஒன்றொன் றாகி மாறுதல் ஒன்றும் இன்றே. ௧௬௮

(உரை) ஜீவனையொழிந்த நான்கான்மாக்களும் ஒன்றையொன்றறியுந் தன்மையல்லவாம். அவ்வான்மாக்கள் நான்கும் ஒன்றுகெட்டு ஒன்றுமாகா. ஓரான்மாவினிடத்திலே புக்கு ஓரான்மா கூடிநில்லாது. அப்படிக் கூடாதாயினுங் காயமாமிடத்துப் பொருந்தியும் நிற்கும். அவ்வான்மாக்கள் அநாதியிற் கூட்டமன்றி இவ்விடத்துப் புதிதாக வந்து கூடுவதுஞ்செய்யா. பழைய ஆன்மாத்தன்மை கழிதலும் உண்டாகாது. அவ்வான்மாக்கள் கூடுமிடத்துச் சேரக்கூடுவதொழிந்து ஒரொன்றாகக் கூடுவதுஞ் செய்யா. இவையிற்றின் செய்தி ஒருகாலும் ஒழிவதில்லை. ௪

கோண்டுமுன் விரித்தல் நீட்டல் குறுக்குதல் குவித்
தல் ஊன்றல், உண்டுதின் றுலர்த்தல் மீட்டல் உடைத்
திடல் ஒன்றும் ஒண்ணா, விண்டுபின் புறம்பும் போகும்
வேறுநின் றுள்ளு மேவும், பண்டுமின் றென்றும் எங்கும்
பரந்தொரு தன்மைப் பாலே. ௧௬௯

(உரை) முன்கூறிய ஆன்மாக்களை முன்னே யுண்டாக்கிக்கொண்டு பரப்புதலும் அதனை வர்த்திப்பித்தலும் அதனை எல்லையிலே குறுக்குதலும் சேர எடுக்குதலும் அவற்றிலே யுற்றுநிற்றலும் அதனை உண்டு தின்று கெடுத்தலும் மீளவுண்டாக்குதலும் அவற்றைப் பிளந்திடுதலும் என்னும் இவற்றின் ஒன்றுஞ் செய்ய ஒண்ணாது. விரிந்த அண்டகோளகைக் கப்புறத்தும் போகும். அதற்கு வேற்றுமைப்பட்டு உருக்களுள்ளும் பொருந்தும். முற்காலத்தும் இக்காலத்தும் எக்காலத்தும் எவ்விடத்தும் நிறைந்து ஒருதன்மைப் பகுதியாயிருக்கும்.

விரிதல் - பரப்புதல், அஃதாவது சிருஷ்டி. நீட்டல் - வர்த்திப்பித்தல், அஃதாவது திதி. குறுக்கல் - ஒடுக்குதல், அஃதாவது சங்காரம். குவித்தல் ஒன்றினுட் செறித்தல், அஃதாவது சருவசங்காரம். ஊன்றல் - உற்றுநிற்றல், அஃதாவது முத்தியின்கட்சேறல். உண்டு தின்றுலர்த்தல் - உண்டுதின்று கெடுதல், தின்ற பகுதியும் உணவாகலின் உண்டு தின்றென்று கூறிற்று. மீட்டல் - மீளவிடுதல், அஃது உமிழ்தல். உடைத்திடல் - சின்னப்படுத்தல், அஃதண்டங்களைக் கெடுத்தல். இவ்வணுக்கள் ஒருவரால் நியமிக்கப்பட்டனவல்ல.

கண்ணினில் காண வொண்ணா சனித்தந்தக் கன்மத் தாலே
நண்ணிடும் உருக்க ளாகி நின்றபின் நரரோ காண்பார்
விண்ணினில் தேவர் காண்பர் ஓரணு மிக்க நான்காய்
எண்ணிய பொருள்க ளெல்லாம் இசைவதென் றியம்புமின்னே.

(உரை) முற்கூறிய அணுக்கள் ஐந்தில் ஆன்மா என்னும் அணுப்பொருள் கண்ணிற் காண்டற்கரிதாகி அக்கன்மத்தாலே ஜநித்து உருக்களாகப் பொருந்தி நின்றிடும். அக்கன்மவுருவொடு நின்றபின் நரரோகாண்பார்.விண்ணாகிய பொன்னெயில் வட்டத்தில் தேவனாகிய அருகபரமனே காணவல்லான். ஆன்ம அணுவொன்றும் தன்னையொழிந்த அணுக்கள் நான்குமாய், எண்ணப்பட்ட வுருக்களெல்லாவற்றுள்ளும் இப்படிச் சென்று பொருந்தும் என்று கண்டநூல் சொல்லும். ௬

ஒன்றினை ஒருவி மூன்றங் குற்றிடா திரண்டு விட்டு
நின்றிடா திரண்டு கூடு நெறிநில நான்கு நீர்மூன்(று)
இன்றிரண் டழல்கா லொன்றாய் இசைந்திடும் பூமி யிவ்வா
றென்றுநீர் நீகா லாகி ஈண்டுவ தென்றி யம்பும். ௧௭௧

(உரை) ஆன்மாவொழிந்து நிலனாதியான அணுக்கள் நான்கும் தம்மிற் கூடுமிடத்து ஓரணுவைவிட்டு மூன்றணுத் தம்மிற்கூடி நில்லாது; இரண்டணுவை விட்டு இரண்டணுக்கூடாது. (எனவே கூடுமிடத்திவை நான்குங்கூடி நிற்குமென்பது கருத்து.) இவை நான்கும் தம்மிற் கூடிநிற்கு மென்று சொல்லு முறைமையாவது எங்ஙனமென்னில், இப்பொழுது பிருதிவியில் கந்த ரச ரூப பரிசம் நான்கும், அப்புவில் இரச ரூப பரிச மூன்றும், அக்கினியில் ரூபம் பரிசம் இரண்டும், வாயுவிற் பரிசம் ஒன்றுமாகிய குணங்கள் பொருந்தியிருக்கும். இந்த முறைமையிலே பிருதிவி அப்பு தேயு வாயு என்று கூறும் அணுக்களின் குணங்கள் கூடிநிற்கும் என்று சொல்லும் நூல்கள். ௭

வெண்மைநன் பொன்மை செம்மை நீல்கழி வெண்மை பச்சை
உண்மையிவ் வாறின் உள்ளும் கழிவெண்மை ஓங்கு வீட்டின்
வண்மைய தாகச் சேரும் மற்றவை உருவம் பற்றி
உண்மையவ் வொட்டுத் தீட்டுக் கலப்பினில் உணரும் என்றான்.

(உரை) வெண்மையும் நன்றாகிய பொன்மையும் சிவப்பும் நீலமும் மிக்கவெண்மையும் பச்சையுமாகிய ஆறுவன்னமுள ; இவ்வாறு வன்னத்தினுள்ளும், மிக்க வெண்மையென்று கூறிய வன்னமே பெரிய பொன்னெயில் வட்டத்துக்குச் சிறப்புடைத்தான வன்னமாகச்சேரும்,—ஒழிந்த வெண்மை பொன்மை சிவப்பு நீலம் பச்சை என்னும் ஐந்து வன்னமும் மற்றை அணுக்கள் நான்கினை வடிவுகளைக் கூடிநிற்க, அந்த ஆன்மாவானது இவ்வுருக்களைப்பற்றுதல் இழிதல் கூடுதல் இவையிற்றால் அறியுமென்றான். ௮

பேறிழ விடையூ றின்பம் பிரிவிலா திருக்கை மற்றும்
வேறொரு நாட்டிற் சேறல் விளைந்திடு மூப்புச் சாதல்
கூறிய எட்டும் முன்னே கருவினுட் கொண்ட தாகும்
தேறிய ஊழிற் பட்டுச் செல்வதிவ் வுலகம் என்றான். ௧௭௩

(உரை) செல்வம் முதலிய கூடுதலும் அவை நீங்குதலும் துக்கமுறுதலும் சுகமுறுதலும் உடலொடு நீங்காமையும் வேற்று நாட்டுச் சேறலும் விருத்தாவத்தையும் மரணமும் என்று சொல்லப்பட்ட எட்டும் முற்பிறப்பின் வினையிலுள்ளதாய்க் கர்ப்ப கோளகையிலே கைக்கொள்ளப்பட்டுள்ளதாம். ஆதலால், தெளிவாக முற்பிறப்பிற்

செய்த வினையில் அகப்பட்டு இம்முறைமையிலே நடந்து செல்வது இவ்வுலகமென்றான். ௯

புண்ணிய பாவம் என்னும் இரண்டனுப் பொருந்த வைத்தே
எண்ணிய இவற்றி னோடும் ஏழென எங்க ளோடு
நண்ணிய ஒருவன் கூறும் ஞானமிவ் வாற தென்று
கண்ணிய கருத்தி னோர்கள் கதியினைக் காண்பர் என்றான்.

(உரை) புண்ணிய பாவமென்னும் இரண்டினோடும் அணுக்கள் ஐந்தையுங் கூடவைத்து இவற்றோடும் ஏழெனவெண்ணி, எங்கள் சமயத்தினோடு பொருந்திய கர்த்தாவான ஒப்பற்ற அருகபரமன் அருளிய ஞானம் இத்தன்மைத்தென்று அதனைக்கூடக் கருதுங் கருத்தை யுடையவர்களே நற்கதியாகிய பொன்னெயில்வட்டத்தைக் காணலுறுவார் என்றான். ௧௦

ஆசீவகன் மத மறுதலை

வாராநெறி வீடானபின் மண்மேல் அவன் வந்து
தாராமையின் நூலானது தானேஉள தின்றாம்
சேராமையில் அணுவானவை ஐந்தும்ஒரு தேயத்(து)
ஓராநொரு காலத்தினில் ஒன்றாமுணர் வின்றாம். ௧௭௫

(உரை) மோக்ஷமென்பது மீண்டு காயமெடுத்துவாராவழியால் அடையத்தக்கதாம். அப்படியானவிடத்து, வீட்டுலகத்திருந்த அருகபரமன் பூமியிடத்துவந்து நூல்தருமுறைமை யில்லையாகையால் நூலானது தானுண்டாம் வழியில்லையாம். ஒப்பற்ற தேசமாகிய பொன்னெயில் வட்டத்தில் ஐவகை அணுவுஞ் சேராதாகையால் சரீரியாந் தன்மையில்லையாகும். அதனால், ஒன்றையும் ஒருகாலத்தில் விசாரிக்க மாட்டானும். அன்றியும் கீழான அணுக்களிரண்டின் செய்தியை அறியவுமாட்டான். ஆகையால், அணுக்கள் எல்லாவற்றையுங் கூட்டி ஒன்றாகவும் உணரும் உணர்வையும் உடையனல்லன். ௧

இருபான்மையர் இவர்மண்டலர் செம்போதகர் என்றே
வருபான்மையர் இவர்மண்டலர் மண்மேல்வரு நூலும்
தருபான்மையர் எனின்நீதல மதில்வாழ்பவர் தம்போல்
ஒருபான்மையின் உளராகுவர் உணராதுரை செய்தாய். ௧௭௬

(உரை) இவ்வருகபரமர் இரண்டு பகுதியராயிருப்பர். மண்டலரென்றும் செம்போதகரென்றும்; அவ்விருவரின், இப்படி வரும் பகுதியையுடைய இவர் மண்டலர். மண்டலராகிய இவர் உலகத்தின் கண்ணே வந்து அணுக்கள் ஐந்தின் செய்தியும் ஒருங்கே யறிந்து உலகத்தின்கண்ணே நடக்கும் நூல்செய்த பகுதியை யுடையரென்று நீ சொல்லுகின்றாயாயின், அம்மண்டலர் பூமியில் வாழும் ஆன்மாக்களைப்போல் ஒரு பகுதியிலேயாகுவர்; ஆகவே ஒருரு இரண்டு பேதப்பட்ட அவற்றில் ஒன்று மானுடத் தன்மையும் ஒன்று தெய்வத் தன்மையும் பெறுதல் இல்லையாம்; ஆதலால், விசாரியாமற் சொன்னாய். ௨

உயிரானவை உடல்தீண்டிடல் ஒட்டுக்கலப் பெய்தும்
பயில்வால் உணர் வெய்தும்மெனும் மொழியானவை பழுதாம
துயிலார்தரு மவர்பாலகர் தொடரார்அறி வினைநீ
செயிரார்தரும் உரையேதரும் அதுவேஉன செயலே. ௧௭௭

(உரை) ஆன்மாக்களானவை உடலைப்பற்றியும் உற்றும் கலந்தும் செய்யுந்தொழிலாலே அறிவைப் பொருந்துமென்று நீ சொல்லுஞ்சொல் குற்றமுடைத்தாகும். அஃதெங்ஙனமென்னில், மிக்க வுறக்கம் பொருந்தினவரும் பாலவவத்தை யடைந்தவரும் பற்றியும் உற்றும் கலந்தும் அறிவினை யறியமாட்டார். நீ சொல்லுஞ் சொற்றானே குற்றத்தை மிகவுந் தரும். உன்றொழிலும் அத்தனையோ? ௩

அணுவானவை கீழ்மேல்உள வானால்அவ யவமும்
நணுகாவென லாமேவரின் நாசம்அவை யெய்தும்
அணுகாவெனின் இவைதொள்ளைகொள் ஆகம்முள வாகும்
துணிவாலிவை கலவாபல தொகையாம்வகை இலவாம். ௧௭௮

(உரை) ஆன்மா ஒழிந்து அணுக்களென்று கூறப்பட்ட பிருதிவி முதலான நான்கிலே கீழே யிரண்டுளவாயும் மேலே யிரண்டுளவாயும் நிற்குமாயின், அவை காரணமான சரீர அவயவங்களுங் கூடாவாய் கீழும் யேலுமாய் வேறுபட்டு நிற்குமென்று சொல்லலாமே. அஃதன்றியும்,—அவ்வணுக்கள் நான்கும் சரீர அவயவத்திற் கூடிவருமாயின், அவ்வணுக்களை நித்தியமென்று நீ முன்னர்க் கூறியது மித்தியையாம்; அவை சரீர அவயவங்களிலே பொருந்தா

தென்று நீ கூறின், அவ்வணுக்களின் குணங்களாகிய உதிர மாமிசாதிகளுங் கலந்து நில்லாததுமாய் அணுக்கள் நான்கின் கூறுபலவுங் கூடிய திரட்சியுங் காயத்திற்கில்லையுமாய்த் துணிந்தறியுமிடத்துச் சரீர முறைமையாகாததுமாய்ப் புரைபட்டு நிகழ்ந்ததில்லையாம். ௪

மிகையாம்அணு உளவாகையின் அவையாம்மிக வென்னில்
தொகைநாலிடை அறலால்அவை தொகுமாறில வாகும்
பகையாகையின் மிசைதாழ்மையின் நிலையாவகை பண்ணும்
நகையாம்உரை கழியாயிரம் அவைதூணென நண்ணு. ௧௭௯

(உரை) இவ்வணுக்கள் நான்குமன்றி வேறே அறியத்தக்கதொரு மிக்க அணுவுண்டாகையினாலே மிகவும் யோனிபேதங்களாகிய உருக்களாமென்று நீ கூறின், அணுக்கள்நாலின் கூட்டம் மிகவும் பொருந்தாமல் நடுநீங்கிக் கிடக்கையால் அறியுமணு இவற்றைக் கூட்ட அவை கூடிநிற்கும் வழியில்லையாம். அஃதன்றியும், அவ்வணுக்கள் நாலும் மேலுங்கீழுமாய் நிற்கையாலுந் தம்மிற் பகையாகையாலும் ஆன்மா ஓரிடத்துக் கூடாவகையைச் செய்யாநிற்கும். கோல் ஆயிரங் கூடினாலும் தூணாகாத தன்மைபோல அணுக்கள் கூடியது கொண்டே உருக்களாகாதாகையால் நீ கூறியது நகையாம். ௫

கூடாஅணு அறியாமையின் வளிகூட்டுதல் கூறின்
நாடாவளி அணுவானவை நணுகச்செயும் அவரை
நீடாவினை தன்னாலெனின் நினைவின்றது இன்றாம்
தேடாயொரு வனைநீஇவை செய்வானுள னென்றே. ௧௮௦

(உரை) நீ கூறிய ஐவகை யணுக்களும் தமக்கென அறிவில்லாவாகையால் அவ்வடிவெடுத்துக்கொள்ள வல்லனவல்ல. வாயுவணு ஒழிந்த அணுக்கள் மூன்றையும் ஆன்மாவாகிய அணுக்கூடும்படிக்குக் கூட்டுமென்று நீ கூறின், வாயுவானது அவ்வணுக்களைக் கூட்டுதற்குக் கன்மஞ்செய்யும் ஆன்மாக்களை அறியமாட்டாது, பழைய கன்மத்தினாலே வாயுக்கூட்டுமென்னில், அந்தக் கன்மமும் அறிவையுடையதன்று ஆகையால் தானுங் கூடமாட்டாது; வாயுவைக்கொண்டு கூட்டுவிக்கவு மாட்டாது. இவ்வணுக்கள் ஐந்தையுங் கன்மத்தையுங்கூட்டிக் காயமுண்டாக்குவான் ஒரு கர்த்தாவுளனென்பதனை ஆராய்வாய். ௬

பட்டாசாரியன் மதம்

வேதமே யோதி நாதன் இலையென்று விண்ணில் ஏறச்
சேதமாங் கன்மஞ் செய்யச் சைமினி செப்பு நூலின்
நீதியே கொண்டு பட்டா சாரியன் நிகழ்த்து நீர்மை
ஓதநீர் ஞாலத் துள்ளே உள்ளவா றுரைக்க லுற்றும். கஅக

(உரை) இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நாலுவேதத்தையுமே ஓதி அவ்வேதமொழியக் கர்த்தாவில்லையென்று சுவர்க்கம் புகுதற்குத் தனச்சேதமாம்படி சோமயாக முதலாகிய கன்மங்களைச்செய்தற்குச் சைமினி பகவானாலே அருளப்பட்ட சூத்திரத்தின் வழியைக் கொண்டு பட்டாசாரியன் என்பான் பாட்டமாகச் சொல்லுமுறைமையை ஒலிபொருந்தின சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமியிடத்தே உள்ளபடியே சொல்லாநின்றேம். க

உற்றிடுங் காம மாதி குணங்கள்தாம் உயிர்கட் குண்டாம்
மற்றிவை தருமே யாகின் மறைமொழி வாய்மை யின்றும்
கற்றநூல் அளவாற் போதம் கலப்பது கல்வி யின்றேல்
பெற்றிடும் மழவு மூங்கை என்னவே பேச லாமே. கஅஉ

(உரை) ஆன்மாக்களுக்கு அநாதியே பொருந்திய காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியம் அகங்காரம் இடும்பையாகிய குணங்கள் கூடிநிற்கும். இக்குணங்களே ஆன்மாவுக்கு அறிவைத் தருமாகில் வேதவசனத்தால் ஒரு நன்மையுமில்லையாம். ஆகையால், ஆன்மாக்கள் கற்றநூல் எவ்வளவோ அவ்வளவே அறிவுண்டாம். நூல்கற்றலில்லாத ஆன்மாக்களைப் பிறந்து முதிராத பாலரென்றும் ஊமையென்றுஞ் சொல்லலாம். உ

உண்டொரு கடவுள் வேதம் உரைத்திட உயிரின் தன்மை
கொண்டவன் அல்லன் என்றுங் கூறிடின் உருவங் கூடில்
பண்டைய உயிரே யாகும் படித்தநூ லளவு ஞானம்
கண்டிடும் உருவ மின்றேல் கருதுவ தில்லை என்றான். கஅங

(உரை) சுயம்புவாகிய வேதத்தைக் கூறுதற்கு ஒரு கர்த்தாவுண்டென்றும் அக்கர்த்தா ஆன்மத்தன்மையன் அல்லன் என்றுஞ் சொல்லின், வேதத்தைச் சொன்னனென்ற கர்த்தாவானவன் வேதஞ்

சொல்லுமிடத்துச் சரீரியாய்ச் சொல்லவேண்டும்; ஆகையால், அப்படிச் சரீரியாகில் ஆன்மத்தன்மையனுவன். அப்படிச் சரீரியான ஆன்மா தான் கற்றநூல் அளவே அறிவையுடைத்தாம். அத்தனையே, வடிவில்லையாயின் நூலைக் கருதிச்சொல்லுந் தன்மையுமில்லையாம். ஆதலால் வேதஞ் சுயம்புவேயாம். ங

தேவரும் முனிவர் தாமும் சித்தரும் நாரும் மற்றும்
யாவரும் உரைப்பர் வேதம் இயம்பினர் இன்ன ரென்னப்
போவதன் றென்று நாளும் பரம்பரை புகல்வ தாகும்
கூவல்நீ ரென்னில் கொள்ளேம் மறுமையைக் குறித்த லாலே.

(உரை) பிரம விஷ்ணுக்கள் முதலாகிய தேவர்களும் அகத்தியர் வசிட்டராதி இருடிகளும் சித்தர்களும் ஒழிந்த வித்தியாதரர் கந்தருவர் கின்னரர் கிம்புருடர் பைசாசர் இயக்கர் முதலாயினரும் நரர்களும் வேதம் இன்னர் சொன்னர் என்று தம்மால் அறியப்படுவதன்றென்று சொல்லாநிற்பர்; ஆகையால், காலந்தோறும் பழையதாக வருமென்றே சொல்லப்படுவதாம். கூவலில் நீர்போலத்தானே வந்து தோன்றப்பட்டதென்று சொல்லும் உவமையும் கொள்ளேம். அஃதொருவனுற் செய்யப்படுதலானும் மறுமையெய்தத் தக்கதாயிருத்தலானும். ச

உன்னிய அங்க மாறும் மூன்றுப வேதந் தானும்
தன்னுளே அடக்கி வேறு தங்கிடா வகையைச் சார்ந்து
முன்னமோர் தோற்ற மின்றி முடிவின்றி நித்த மாகி
மன்னியோர் இயல்பே யாகி வழங்கிடும் மறைய தென்றான்.

(உரை) வேதமானது கருதப்பட்ட ஆறங்கங்களையும் மூன்றுபவேதங்களையும் தனக்குள் அடக்கி, அர்த்தங்கள் எல்லாம் தன்னிடத்தடங்குவதொழிந்து வேறொரு நூலின் அர்த்தந் தன்னிடத் தில்லையென்னுமையைப் பொருந்தி, ஆதியிலும் ஓரிடத்தில் தோன்றிற்றென்னும் முறைமையுமின்றி, ஒரு காலத்திலுங் கேடின்றி நித்தமுமாய், ஒருதன்மையாய் நிலைபெற்றுப் பேதிக்கப்படாததாய், இப்படி வழங்காநிற்கும் அவ்வேதமென்று கூறினன்.

ஆறங்கமாவன—சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தோவிசிதி. மூன்று உபவேதமாவன—ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம். ரு

187111

செய்தியும் நெறியும் மேவுந் தேவரும் பொருளும் எல்லாம்
எய்திய பன்மை யாலே ஓரியல் பியம்பா தாகும்
ஐயமில் காலம் மூன்றும் அறிந்தபின் நெஞ்ச கத்தாய்
மெய்யதாய் வந்து தோன்றி விளங்கிடும் வேத நூலே. கஅஎ

(உரை) படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் பலசெய்திகளுஞ் செய்திசெய்யும் வழியும் அவ்வழியிலே மேவுந் தேவரும் அவர்களாற் கொடுக்கப்பட்ட இகலோக பரலோக சாத்தியமான வர்த்தங்களும் இவையெல்லாம் பன்மையாகப் பொருந்தி நின்றனவாகையாலும் இவற்றைச் சொல்லவேண்டுகையாலும் வேதமுமொரு நெறிப்படச் சொல்லாதாம். அம்மூன்று தொழிலாலே மூன்றுவிதப்பட்டு இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்று எல்லாராலும் அறியப்பட்டபின், வேதமானது ஒருவடிவைப்பொருந்தி அவ்வடிவின் நெஞ்சகத்தேபொருந்தி உலகத்திலே விளங்காநிற்கும். (காலமூன்றுமறிந்த பின் வேதம் உருவாமென்பதனால் அநாதியில் அருவாமென்னும் பொருள்பயந்தது.) கூ

தப்பிலா வாகுந் தாது பிரத்தியந் தன்னி னோடே
ஒப்பிலா தாம்பி ராதி பதிகமாம் உறுப்புங் கொண்டு
செப்புமாம் வேதம் சொன்ன விதிப்படி செய்யச் சேம
வைப்பதாம் வீடு பாசம் மருவலாம் ஒருவ லாமே. கஅசு

(உரை) வேதமானது தவறில்லாதனவாகிய பகுதி விகுதிகளோடு உவமையில்லாததாகிய பெயர்ப் பகாப்பதம் என்னும் அவயவங்களையுந் தன்னிடத்திலே அடக்கிக்கொண்டு சொல்லுவதாம். அந்த வேதஞ்சொன்ன விதிப்படி கன்மத்தைச்செய்யப் பாசக்கட்டுவிட்டு நீங்கலாம்; அது நீங்கவே வீட்டின்பமும் ஆப்த நமாகக்கூடும்.

போக்கொடு வரவு காலம் ஒன்றினில் புணர்வ தின்றி
ஆக்கவே றொருவ ரின்றி அநாதியாய் அணுக்க ளாகி
நீக்கிடா வினையிற் கூடி நிலமுத லாக நீடி
ஊக்கமா ருலகம் என்றும் உள்ளதென் றுரைக்க லாமே.

(உரை) ஊக்கம் ஆர் உலகம் போக்கொடு வரவு காலம் ஒன்றினில் புணர்வது இன்றி - வலிமைபெற்ற பிரபஞ்சமானது சங்காரமுஞ் சிருட்டியும் ஒருகாலத்திலும் உண்டாகாததாய்,—ஆக்க வேறு ஒருவர் இன்றி - இரக்ஷிக்க ஒரு கர்த்தாவுமில்லையாய்,—அநாதியாய் - அநாதியே யுள்ளதாய்,—அணுக்களாகி - ஆன்ம சம்பந்தியாய்,—நீக்கிடா வினையிற்கூடி - நீக்கப்படாத புண்ணிய பாவங்களோடுகூடி,—நிலமுதலாக நீடி - பிருதிவி முதலாகிய தத்துவங்களாக நிலைபெற்று, என்றும் உள்ளதென்று உரைக்கலாமே - என்றும் உள்ளதென்று சொல்லலாம். அ

நித்தமாய் எங்கு முண்டாய் நீடுயிர் அறிவு தானாய்ப்
புத்திதான் ஆதி யாய கருவியின் புறத்த தாகிச்
சுத்தமாய் அருவ மாகித் தொல்லைவல் வினையின் தன்மைக்(கு)
ஒத்ததோர் உருவம் பற்றிப் புலன்வழி உணர்ந்து நிற்கும்.

(உரை) பிரபஞ்சத்திலே நிலைபெற்ற ஆன்மாவானது அழிவில்லாததாய் நிறைவையுடைத்தாய்,—அறிவே தனக்கு வடிவமாய்,—புத்திமுதலாகிய தத்துவங்களிடத்துக் கலவாது நிற்பதாய், தத்துவங்கள் நீங்கின விடத்தே அழுக்கற்று நிற்பதாய்,—அருவமாய்ப் பழையதாய்வரும் புண்ணிய பாவங்களினது முறைமைக்கீடான காயத்துடனே கூடி இந்திரியங்கள் வழியாகக் கண்டு கேட்டு உண்டுயிர்த்துற்றறியாநிற்கும்.

புத்திதானாதியாய கருவிகளாவன - இந்திரிய முதற் பிரகிருதியீறாய தத்துவம் இருபத்துநாலும். புறம் - ஏழாம்வேற்றுமை யிடப்பொருள். ஒத்ததோருருவம் - வினைகளுக்கேற்ற வடிவம். சுத்தமாகிறது கன்மவசமாயுழலுமோவென்னில் சுத்தமாகாதாகின் முத்தியிலுஞ் சுத்தனாகான். சத்காரியவாதமுங் கெடுமென்பது கருத்து. இஃது ஆன்ம லக்ஷணம். கூ

செயல்தரு வினைகள் மாய்ந்து சிந்தையிற் சேர்ந்து நின்று
பயனொடு பலியா நிற்கும் பலாலமும் தழையு மெல்லாம்
வயல்தனின் மருவி நாசம் வந்தபின் பலத்தை வந்திங்(கு)
இயல்பொடுந் தந்தாற் போல என்றும்பின் இயம்புகின்றான்.

(உரை) முற்சநநத்தின் மனவாக்குக் காயங்களின் தொழில்களாலே யுண்டாகிய புண்ணிய பாவங்கள் அக்காயத்துடனே தூலங்கெட்டுச் சூக்குமமாக ஆன்மாவோடும் பொருந்தி இந்தச் சநநத்திற் பிரயோசநத்தோடு ஆன்மாவுக்குண்டாகா நிற்கும். அஃதென்போல

என்னின், வைக்கோல் தழை முதலானவைகளெல்லாங் கழனியைப் பொருந்திநின்று வடிவுக்கேடு வந்தபின்பு அவ்வயலின் பயிருக்கு நன்மையைக் கொடுத்தாற் போலவென்றும் கூறி வேறுஞ் சில சொல்லாநின்றான். ௧௦

நீதியா நித்த கன்மம் நிகழ்த்திடச் சுபத்தை நீங்கார்
தீதிலா இச்சா கன்மஞ் செந்தழல் ஓம்பிச் செய்ய
ஏதுதான் வேண்டிற் றெல்லாம் எய்தலாஞ் சோம யாகம்
ஆதிதான் ஆசை வீசி அமைத்திட வீட தாமே. ௧௬௧

(உரை) அவரவர் சூத்திர முறைமையிலே சந்தியா அநுஷ்டானம் காயத்திரி செபமுதலிய பிராமணர் செய்ய ஏனைய வருணத்தாருந் தமக்குக் கற்பித்த விதிவழாமற் செய்யவே நன்மையை எப்பொழுதும் நீங்கார். குற்றமில்லாத இச்சாகன்மமாகிய வைசுவதேவ பலி காரணாதிகளும், தக்ஷிணாக்நி காருகபத்தியம் ஆகவநீயம் முதலிய அக்கினிகளுஞ் செய்யத் தான் விரும்பியது யாது அவையெல்லாம் எய்தலாம். சோமயாக முதலிய யாகங்களைச் செய்யுமிடத்து அர்த்தத்தை மிகவுஞ் செலவழித்துச் செய்ய வீட்டின்பம் உண்டாகும். ௧௧

கருதிய கன்மம் ஞானம் இரண்டுங்கா லாகக் கொண்டு
மருவிட லாகும் வீடு மதிதனை மதித்துச் செய்தி
ஒருவிடில் பதித னாகும் பதிதனைக் கதியின் உய்க்கத்
தருவதோர் நெறிதான் இல்லை என்னவுஞ் சாற்றி னானே.

(உரை) சூத்திர விதிகளாலே கருதப்பட்ட கன்மமும் வேதஞ் சுயம்புவென்னு ஞானமும் ஆகிய இரண்டையும் இடமாகக்கொண்டு வீட்டின்பத்தைப் பொருந்தலாகும்; வேதம் சுயம்புவென்றறியும் ஞானமே அமையுமென்று நிச்சயித்துக் கன்மத்தைக் கைவிடிற் கன்ம சண்டாளனாகும். கன்ம சண்டாளனை மீள நல்லநெறியிலே யேறவிடுவதற்கு உண்டாவதோர் வழி வேதத்திலும் இல்லையென்று சொன்னான். ௧௨

பசுப்படுத்(து) யாகம் பண்ணப் புண்ணியம் ஆவ தென்று
வசிப்பினான் மறைகள் சொன்ன வழக்கினால் வாய்மை யாக
நசிப்பிலா மந்தி ரங்கள் நவிற்றலின் இன்ப மாகும்
பசிப்புளான் ஒருவன் உண்ணப் பசியது தீர்ந்த பண்பே.

(உரை) எப்பொழுதும் பசுபந்தனஞ் செய்து யாகங்களைச் செய்வது புண்ணியமாமென்று, குற்றமில்லாத இருக்கு யசு சாமம் அதர்வணம் என்னும் நாலுவேதங்களுஞ் சொன்ன விதிப்படி உண்மையாகக்கொண்டு கேடில்லாத மந்திரங்களைச் சொல்லுதலாற் போக மோக்ஷமாகிய இன்பத்தைத் தரும். அஃதென்போல வென்னில், மிகவும் பசிப்புளான் ஒருவன் உண்டல்செய்தாற் பசிதீர்ந்தின்பமுற்ற தன்மையாம். ௧௩

பட்டாசாரியன் மத மறுதலை

வேதஞ் சுயம்புவென வேதந்த வாய்மொழியில் வேறும்
ப்ரமாண முளதேல், நீதந்து காணிங்கு மாதுங்க பாரதமும்
நேர்கண்ட தாகும் அதுபோல், ஓதுஞ் சொலாய்வருத
லானுங்க டாதிபட மோவந்தி டாஒருவரா, லேதந்த தாம
றைக ளாய்வந்த வாய்மொழியும் வேறிந்து சேக ரனதே.

(உரை) வேதஞ் சுயம்புவென்று பட்டாசாரிய!நீ கூறியவுண்மையொழிய நான் சுயம்புவென்று அவ்வேதந்தான் கூறிற்றில்லையாம். அஃதன்றியும், வேதம் அநாதி யென்பதற்கு வேறு பிரமாணமில்லை. உண்டாயின் நீ சொல்லிக்காண் இவ்விடத்தே. மிகவும் பெருமையுடைய மகாபாரதம் பிரமாணமென்று நீசொல்லின் அதுவும் வியாசராலே சொல்லப்பட்டு வேதத்திற் கொப்பாய் ஐந்தாம் வேதமென்று வழங்கப்படுவதாம்; அதனாலும் அந்த மகாபாரதம்போல, ஒருத்தனாலே சொல்லுஞ் சொல்லாய் வருதலானும், மண்பாவையுங் கிழிப்பாவையும் செய்வார் ஒருவரின்றி வந்து தோன்றாமையானும், அவ்வேதமும் ஒருவனாலே சொல்லப்பட்டதேயாம். வேதம் ஒருவன் சொன்னனென்று சொல்லப்பட்டு வேறு இரகசியங்களாய் வருகிற சத்திய வசநமும் சந்திர சேகர னிடத்ததே. ௧

உரைதந்தி டான்ஒருவன் எனிலிந்த வானினிடை ஒலி
கொண்டு மேவி உளதாம், புரைதந்த வாம்மறைகள் அபி
வெஞ்ச மாயொளிர்கை பொருள்தந்த தீப மதுவேல், வரை
தந்த தாலிவுரை கபிலன்சொ லாகுமது மறைகின்ற வாறும்

வரவும், விரைவின்சொ லாயிதனை யெதுகொண்டு மேவுவது
விடைகொண்ட தாது றுரையே. ௧௬௫

(உரை) வேதம் தானே யுண்டானதன்றி ஒருவன் சொல்லானென்று நீ சொல்லின், இவ்வாகாசத்தின்கண்ணே பொருந்திய ஓசையைக்கொண்டு உண்டானதாக வேண்டும்; ஆகையால், வேதங்களுஞ் சொல்லும் பொருளும் விளங்காமற் குற்றத்தை யுடையவாம். அற்றன்று, வேதஞ் சர்வத்தையும் விளக்குவித்துத் தானும் நின்று விளங்குகை, விளக்கு பொருளைக்காட்டித் தானும் நின்று பிரகாசித்தாற்போல என்று கூறின், வேதத்தின் பெருமை இல்லையாய் ஓரெல்லைக்குள் அகப்பட்டதாம்; ஆகவே நீ உவமை கூறல் கிரீசர சாங்கியன் சொல்லுஞ் சொல்லாம். அவ்வேதம் அருவாம் முறைமையும் உருவாய்த் தோன்றும் முறைமையும் இங்ஙனமென்று விரைவிலே சொல்லுவாயாக. வேதம் முன் அருவாய்ப் பின் உருவாய்த் தோன்றிச் சொல்லும், பொருளும் விளங்கச் சொல்லுமென்று நீ சொல்லுகின்ற இதனை யாது பிரமாணமாகக் கொள்வது? ஆதலால், நீ சொல்லுகின்ற சொல் பயனற்றுப் போனதாம். ௨

உருவின்க ணேமருவி வரில்இன்று தேரைஉரை உள
துங்கள் நூலின் மறையும், தருகின்ற நாதரவர் இவரொன்று
நாமமது தரவந்தி டாமை யதனால், வருமென்று நேடியெனில்
வளர்கின்ற தீவதனில் வருகின்ற வாடை பலவால், ஒருதந்து
வாயனவன் இவனென்ற போதிலிவை உளதென்று நீடிய
வையே. ௧௬௬

(உரை) உருவின்கணே மருவிவரில் - வேதமானது யாதோர் உருவைப்பற்றி மனத்திடத்ததாய்ப் பிரகாசிக்குமென்று நீ சொல்லில்,—இன்று தேரை உரை உளது உங்கள் நூல் இன்மறையும்-ஒருருவைப்பற்றி வருமென்னும் நியமம் இல்லாதபடியாலே இப்பொழுது தேரையிடத்துண்டாகிய சத்தத்திலும் உங்கள் நூலாகிய இனிய வேதம் உண்டாகும்,—தருகின்ற நாதரவர் இவரொன்று நாமமது தரவந்திடாமையதனால் வருமென்று நேடியெனில் - வேதத்தை யுண்டாக்கியவன் இன்னனென்று பேர் குறித்து வேதஞ் சொல்லாதாகையால் தானே தன்னை ஓதத்தக்க உருவைத் தேடி அஃதிடமாகத் தோன்றுமென்று நீ சொல்லில்,—வளர்கின்ற தீவதனில் வருகின்ற

ஆடைபலவால் - பல வளங்களும் வளர்கின்ற தீவின்கண்நின்று வருகின்ற புடைவை பல பேதங்களையுடைத்து; ஆகையால், ஒரு தந்துவாயனவன் இவனென்றபோதில் இவை உளதென்று நீடியவையே - பல பேதப்பட்ட புடைவைகளைக் கண்டபொழுதே தந்துவாயனென்று சொல்லப்பட்டவனாலே இப்புடவை யுண்டானதென்று அறிந்தாற்போல வேதமுஞ் சத்தார்த்தமாகையால் ஒருவனாலே செய்பட்ட தென்றறிவாயாக. ௩

மறைநின்று நாலுதிசை யவர்ஒன்ற தாகவரும் உரைதந்த
வாய்மை அதனால், நிறைவென்று நீடுமெனில் வனையுங்க
டாதிபல சொலவொன்றி நீடியு ளதாம், குறைவின்றி நாடும்
மொழி அவைசென்று கூடுவதோர் குணமுண்ட தாகு மலர்
தான், உறைகின்ற மாலைதனில் உளதென்ற தாகுமெனின்
உணர்வின்ற தாழி ஒலியே. ௧௬௭

(உரை) நான்கு திக்கிலும் பாஷை பேதிக்கப்பட்ட ஜாதிபேதங்களும் மற்றொரு நூல்போலாகாமல் ஒருமைப்பட ஓதிவரும் உண்மையாலே, வேதம் அநாதியாய் நிறைவையுடையதாய் நிலைபெறுமென்று கூறின், குலாலனால் உண்டாக்கப்படுங் கடாதிகள் பல பேதம் பொருந்தி அநாதியிலே உள்ளதாகிறதுபோலக், குற்றமின்றி யறியப்படுஞ் சொல்லும் பொருளுங் கூடும்படிக்குக் கூட்டுவதோர் கர்த்தாவுண்டாகவேண்டும்; அற்றன்று, மாலையினுறையும் பூவுமணமும் அந்த மாலையினிடத்தினுள்ள வல்லவாய் முன்பே யுண்டாயவற்றைப் பின்பு மாலையாகக் கூட்டினாற்போலச் சத்தமும் அர்த்தமும் முன்பேயுள்ளவாய்ப் பின்பு மூர்த்திகளாலே கூட்டப்பட்டவென்று கூறின், அம்மூர்த்திகள் சத்தத்தை அறிந்து கூட்டப்பட்டார்கள் அன்றாகில் உன்வேதம் ஆழியின் ஓசையை ஒக்கும். ௪

உடல்நின்று நாமுணரு மதுகண்ட வாறொருவன் உல
கங்க ளேஉ ருவமாய், இடைநின்று மாமறைக ளவைஅன்று
வாய்மொழிய இவைகொண்டு லோக நெறியின், கடனின்று
வாழுமது கருதும்பின் ஆணைவழி கருமஞ்செய் காசினி
யுளோர், திடமென்று சீர்அரச னுரைதங்கும் ஓலைதிரு முக
மென்று சூடு செயலே. ௧௬௮

(உரை) சரீரத்தினின்று நாமுணருமது கண்டபடியாலே, ஒரு கர்த்தாவானவன் பிரபஞ்சமே திருமேனியாய்ப் பிரபஞ்சத்திடையிலே யெழுந்தருளி நின்று, மகிமையுடைய வேதங்களை அநாதியிலே திருவாய் மலர்ந்தருள, பின்பு அவ்வநாதியைக்கொண்டு பிரபஞ்சமானது அவ்வேதங்களின் முறையிலே நின்று வாழுமதனைக் கருதி அநாதியென்றுஞ் சுயம்புவென்றுஞ் சொல்லா நிற்கும்; அஃதென் போலவென்னின், உலகநாயகனாகிய ஓரரசன் ஆணைவழி யொழுகும் உலகத்தினுள்ளார்க்குத் திடமாக அவ்வரசனுரை வரைந்த ஓலையைத் திருமுகமென்று மங்கல மரபினாற் கூறித் தலையில் தரித்து அவ்வரசனைப்போலச் சிறப்புச் செய்கையாம். ௫

முடிவின்றி வேதியர்கள் முதல்வந்த மூவர்களும் மொழியும்சொல் ஆரிய மெனில், கடிவின்றி யேகணித ரவர்கண்ட வாறதுவென் வடகண்ட சாதி கடியா(து), ஒடிவின்றி ஓதுவதென் உரைதங்கு வேதமொழி உளதென்று கூறு மவர்தாம், அடியின்று தானெனுமத றிவின்றி ஈனுமவர் இலையென்ற ஆத ரவதே. ௧௯௯.

(உரை) ஆரியமாகிய வேதமே கேடில்லாத பிரம க்ஷத்திரிய வைசியர் என்னும் மூன்று சாதியும் ஓதுஞ்சொல்லென்று நீசொல்லின், ஏனைய வருணத்துள்ளாராய்ச் சோதிடஞ்சொல்லுமவர்கள் வேதத்துக்கங்கமாகிய சாத்திரத்தை ஓதாமல் அறியும்படி எங்ஙனம்? அஃதன்றியும், இத்தத்தீவின் வடகூற்றினுள்ளார் மற்ற வருணத்தார் வேதத்தை ஓதத் தகாரென்று நீக்கப்படாமல் எல்லாராலும் ஓதப்படுவானேன்? ஆதலால் நீக்கப்படாதாயிற்று. எல்லார் சொல்லுந் தன்னிடத்திலே யுடைத்தானவேதம் சத்தமாகவுள்ளதென்று கூறுமவர் தாமும், வேதத்துக்கு மூலகர்த்தாவில்லையென்று சொல்லுமது, பிறந்த பிள்ளைக்குப் பெற்றவர் இல்லையென்று அறிவிலாது விரும்பிக் கூறுதல்போலும்.

கடிவின்றி - நீக்கமின்றி. ஒடிவின்றி - தவிர்தலின்றி. ஈனுமவர் - உண்டாக்குமவர். ஆதரவு - இலக்கணை. முடிவின்றி வேதியர்கள் - அளவிறந்த பிராமணர்கள். முதல்வந்த மூவர்களும் - பழைய பிரம விட்டுணு ருத்திரர்களும். கடிவின்றியே கணிதரவர்கண்டவாறது வென் - கடியாது கணித நூல்களும் ஒருவர் சொல்லாமல் வந்ததாம்.

வடகண்ட சாதிகடியா - வடபூமியிலுள்ளாருங் குறைபடாமல் வேதஞ் சுயம்புவென்றே சொல்லா நின்றார்கள் என்றலுமாம். ௬

அறிகின்ற பான்மைஅவ யவநின்ற தாகில்அணு அழியுங்க டாதி யெனவே, செறிகின்ற வாறதிலை யெனின்வந்து சேருமது திடமன்றுகூட வொருவன், குறிகொண்டு காரின்முளை வருகின்ற பீசமவை குலையொன்றி வேனி லழியும், உறுகின்ற காலமவை உடனின்று போயழியும் உலகென்று நீடி யிலதே. ௨௦௦

(உரை) ஆன்மாவானது பேதப்பட்டுச் சரீரவவயவத்தைத் தானறியும் பகுதியிலே கூடிநின்றதாயின் அழியுந் தகுதியையுடைய சரீராதிபோல ஆன்மாவும் அழிந்துபோம். ஆன்மா அந்தச் சரீரவவயவத்தைச்சேராதுசரீரவவயவந்தானேசென்றுஆன்மாவைச் சேருமென்று கூறின், சரீரவவயவந்தானே ஆன்மாவைக்கூடும் நிலைமையுடைத்தன்று; கர்த்தாவொருவன் குறிக்கோளாகக்கூட்டுகையாலே ஆன்மாவுஞ் சரீரமுங் கூடிவரும், முளைகளானவை கார்காலத்து விதையினின்று முளைத்துவரும் வேனிற் காலத்துத் தகுதி வேறுபட்டழியும்; அங்ஙனம்போல், பிரபஞ்சமானது சிருஷ்டி திதி சங்காரமென்று கூறப்பட்ட மூவகைத்தொழிலுற்ற காலத்துடனே கூடித்தோன்றி நின்று கெடுமாகையாற், காலத்தோடுங் கூடிவரும் பிரபஞ்சமானது எந்நாளும் நிலைபேற்றையுடையதன்றாம். ௭

நிறைவெங்கு மாகில்உயிர் நெறிநின்று போய்வருதல் அணைவின்ற தாம் உடலிலே, குறைவின்றெ லாமும்உளகுடகந்த மாகில்அவை விடநின்ற வாறு குறியா, உறைகின்ற மாதவர்கள் உடனின்று போய்வறிதோர் உடல்கொண்டு மீள்வ துணராய், மறைதந்த வாய்மைதனில் நிறைவின்றி யேயுலகின் மலைகின்ற தாலுன் உரையே. ௨௦௧

(உரை) ஆன்மாவானது பிரபஞ்சமெங்கும் நிறைந்து நிற்குமாயின், ஆன்மாவானது நித்திய கன்மமுதலாகிய நெறிகளிலே பொருந்தி நின்று அந்த நெறிக்குத் தக்க சுவர்க்காதிபதங்களிலே சென்று புண்ணியப்பயனை புசித்துப் புண்ணியகன்மந் தொலைந்தால் மீளவும் வருமென்னும் வேத வாய்மையில்லையாம்; அற்றன்று,

எல்லா ஆன்மாக்களும் சரீரத்திலே குடத்திற்கட்டின பூமணம்போல நிறைந்துநிற்குமென்று கூறுகின்றாயாயின், அவ்வான்மாக்கள் சரீரங் கெட்டபோது தாங்கெடாமல் உடலைவிட்டு நிற்கிறவழியைக் குறிக் கொள்ள மாட்டா,—உடலின்கண் உறைகின்ற மகாயோகிகள் அவ் வுடலைவிட்டுப் பரகாயப்பிரவேசஞ் செய்வதும் வருவதும் அறியாய். வேதஞ் சொன்ன சத்தியமான அர்த்தத்தில் உனக்கு நிறைவில்லை யாதலால் நீ சொல்லுகின்ற சொல்லும் உலகத்தின்கண் மாறுபாடு பொருந்திற்று. ௮

அழிகின்ற தால்வினைகள் ஆகின்ற வாறெனொரு வது
மங்கி யான பரிசேல், ஒழிவின்றி ஓதநமும் அறவுண்ண நாம்
வினைகள் உறுகின்ற வாறதெனலாம், கழிகின்ற தாலறிவு
வினை தந்தி டாவினைஞர் கருமங்கள் நாடி யுறுவோர், பழு
தின்றி யேஉதவும் அதுபண்ப தாகஅருள் பரமன்க ணாகும்
வினையே. ௨0௨

(உரை) ஒருவன் செய்த கன்மங்கள் இக்காயங்கெடக் கூடக் கெடுமாகையாற் கன்மம் மேலைக்கு வந்துண்டாம்படி எங்ஙனம், வய லுக்கிட்ட எரு தனது தூலமுறைமைகெட்டுச் சூக்கும முறைமை யாகி வீரியங்கிடந்து பயிருக்கு நன்மை கொடுக்குமாறுபோலச் செய்த கன்மமும் உடலோடு தூல முறைமைகெட்டு ஆன்மாவோடு சூக்கும முறைமையாகிப் பொருந்து மென்று நீசொல்லின், நாம் நாடோறும் உண்ணும் உணவு செரிக்கக் கழிந்தமலம் பயனை அனுப விக்க விளைவருகின்றவாறு மீளவும் நமக்கு நன்மையைத்தருமென் பார் கூறுங்கூற்றெனலாம், காயத்தோடுஞ்செய்த வினைகெடுகையால் அவ்வினை ஆன்மாவையறிந்து கூடமாட்டாது; அதுகூடும்படி, தொழில்செய்தோர்க்குச் செய்ததொழில்கண்டு தொழில்கொள் வோர் அவ்வவர்தொழிற்குத் தக்கதொத்துப் பழுதறக்கொடுக்குந் தன்மைபோல, ஆன்மாக்கள்செய்த புண்ணிய பாவங்களையறிந்து அப்புண்ணிய பாவங்களுக்கீடான புசிப்புக்களைக் கொடுத்தருளிப் புசிப்பிக்குந்தொழில் பரமேசுவரனதாகும். ௯

கருமங்கள் ஞானமது வுடன் நின்ற லால்மருவு கதி
தங்க லாகு மெனின்நீ, தரும் அங்க ராகமுதல் அவைதங்க

மேலறிவு தவிரும்பின் வீடும் அணையா, பொருள் நின்று தே
டிவரு பயன் உண்டு போகவினை புரிகின்ற வாற தெனவே,
திருநின்ற போகம் வளர் அவிசென்று மேவியது செலவுண்டு
சூழ்வ செயலே. ௨0௩

(உரை) நித்திய கன்மமுதலிய கன்மங்களை ஞானங்கூடி நிற்றலா லே அழிவில்லாமையைப் பொருந்தின வீட்டின்பத்தைப் பொருந்த லாம் என்று நீ கூறின், கன்மங்கள் செய்யுமிடத்துத் திரவியார்ஜிதம் வேண்டுகையாலே ஆசைமுதலியனவுண்டாம். அவ்வாசை முதலியன வுண்டாகவே ஆன்மாப் பாசஞானமாய்நிற்கும். அந்தப் பாசஞானத் தாலே மோக்ஷமும் அடையாது; ஒருவன் பொருளைத்தேடி அதனால் உண்டாயபயனை அதிலேநின்று புசித்து அந்தப் பொருள்மாளவே மீளவும் பொருள்தேடுதற்கு முயல்கின்றதனையொப்ப, வெகுவான ஆகுதி செய்கையினாலே அவ்வாகுதிசென்ற புண்ணியத்தால் மிக்க சுவர்க்கபோகங்களைப் பொருந்தி அப்புண்ணியந் தொலையுமளவும் புசித்துத் தொலைய மீளவும் புண்ணியகன்மஞ்செய்ய நினைக்கின்ற செயல் உன் செயல். ௧0

பிரபாகரன் மதம்

அருந்தவனும் சைமினிபண் டாரணநூல் ஆய்ந்தானாய்த்
திருந்தும்உல கினிற்கொண்டு செப்பியநூல் திறமதனைப்
பரிந்துபிர பாகரன்பட் டாசானில் வேறாகிப்
புரிந்துரைசெய் நெறியதனைப் புவனிமிசைப் புகன்றிடுவாம்.

(உரை) அரிய தவத்தினையுடையனாகிய சைமினி முனிவன் முன் வேதநூலை ஆராய்ந்தானாய் நல்ல வுலகின்கண்ணே தான் சொல்லுகின்ற வழிக்குப் பொருந்தத்தக்கவற்றை வேதத்திலே நின் றெடுத்துக்கொண்டு சொல்லப்பட்ட அவனது சூத்திர முறைமை யினைப் பொருந்திப் பிரபாகரன் பட்டாசாரியனாற் சொல்லப்பட்ட பாட்டத்தின் நெறியிலே வந்து அதிற் சிறிது வேறுபடச் சொன்ன வழியதனை யெடுத்து நாமும் பூமியின்கண்ணே சொல்லா நின்றோம்.

அருஞ்செயலின் அபாவத்தே அபூர்வமெனும் அது
தோன்றித், தருஞ்செயல்நின் றழியில்பின் பலிப்பிப்ப தாகு

மது, வருஞ்செயல்லொன் றின்றியே மண்சிலைபோ லாமுத்தித், தருஞ்செயலீ தெனவுணர்ந்து தாரணிமேல் அவன் சாற்றும். ௨௰௫

(உரை) அரிதாகச் செய்யுங் கன்மத்தை யொழிந்தவிடத்திலே அபூர்வமென்ப தொன்றுண்டாய், அந்தக் கன்மத்திலே அறிவு கூடி நின்று தொழிற்பட்டுக் கன்மமுடிந்தபொழுது, பின்புதானின்று பிரயோஜநப் படுப்பிப்பதாம், அவ்வறிவுங் கன்மமுங்கூடி வருந் தொழிலொன்று மின்றியே, வீட்டுநெறியைத் தருகிற செய்தியாவது மண்போலவுங் கல்லுப்போலவும் அறிவுந்தொழிலும் அற்றிருத்தலாம். மண்போலவுங் கல்லுப்போலவும் அறிவுஞ்செயலும் அற்றிருப்பதே முத்தியென அறிந்து பூமியின்கண்ணே இத்தன்மைத்தென்று பிரபாகரன் சொல்வான். ௨

பிரபாகரன் மத மறுதலை

வேறுபலந் தருவதுதான் வினையென்று வேதங்கள்
கூறவோர் அபூர்வந்தான் கொடுக்குமெனக் கொண்டவுரை
மாறுதரு மறையோடு முன்பின்றி வந்ததால்
தேறியவிண் பூமுடிமேற் சேர்ந்துமணந் திகழ்ந்ததுவாம்.

(உரை) முன் ஜநநத்திற்செய்த இருவினையும் இந்த ஜநநத்திலே பலபேதப்பட்டுச் சுகதுக்கங்களைக் கொடுக்குமென்று உன் வேதங்கள் சொல்லாநிற்கவும், முன் ஜநநத்திற் செய்த வினைக்கு இந்த ஜநநத்திலே பலத்தைக்கொடுப்பது அபூர்வமென்பதொன்றென்று பிரபாகரா! நீ மெய்யாகக்கொண்டு சொல்லப்பட்ட சாத்திரம், வேதத்தோடு மறுதலைப்படும். செய்த கன்மத்தினுடைய பலம் அநாதியிலில்லையாய்ப் பின்பு அபூர்வமென்பதொன்றினாலே வந்ததாயின், வாட்டமில்லாத குளிர்ந்த ஆகாயப்பூவுக்கு முன்பு மணமில்லாமல் தலையிலே சேர்ந்தபின்பு மணமுண்டானதென்று சொல்லுந்தன்மை போலும். ௧

ஆநந்தம் கதியென்ன அறிவழிகை வீடென்கை
ஊனம்பின் உணர்விழந்தோர்க் குளதாகும் உயர்முத்தி

தானிங்குச் சிவப்பொழியத் தழல்நிற்கு மாறில்லை
ஞானங்கெட் டுயிர்நிற்கும் எனுமுறைதான் நண்ணாதால்.

(உரை) பரமாநந்தமே வீடென்று வேதங்கள் சொல்லவும் நீ ஆன்மாவினதறிவுகெட்டு மண்போலவுங் கல்லுப்போலவு மாதல் வீட்டின்பமென்று கூறியது குற்றமுடைத்து; அப்படி அறிவுகெட்ட ஆன்மா முத்தியடைவானாயின், மூர்ச்சைவந் தறிவுகெட்டவர்களுக்கும் மிக்க வீட்டின்பம் உண்டாகவேண்டும்; அஃதன்றியும் இவ்விடத்து நெருப்பானது தன்சொரூபமாகிய சிவப்புக்கெட்டால், தானுங்கூடக் கெடுதலன்றி அந்நெருப்பு நிற்கும் வழியில்லையாம்; அதுபோல, ஆன்மாவானது தன்சொரூபமாகிய அறிவுகெட்டால் தானுங்கூடக் கெடுதலன்றி ஆன்மாநின்று வீட்டின்பத்தை அநுபவிக்குமென்று சொல்லுஞ் சொற்பொருந்தாது; ஆகையால், அறிவுகெட்டுக் கல்லுப்போலவும் மண்போலவுமாய் முத்தியடையும் என்னுமது குற்றமுடைத்து. ௨

சத்தப்பிரமவாதி மதம்

உரையா னதுமை யலினால் உலகாம்
புரையோ ருணரும் பொருள்பொய் யிதனை
விரையா துணரும் அதுவீ டெனவே
வரையா துரைவா திவகுத் தனனே. ௨௰௮

(உரை) சத்தமானது மயக்கத்தினாலே பிரபஞ்சமாம். அறியாதார் அர்த்தமுஞ் சத்தத்துக்கு உண்டென்று விசாரிப்பது மெய்யன்றாம். சத்தமே பிரமமாவது, அர்த்தமில்லையென்றறியும் அறிவே வீட்டின்பமாவதென்று,—சத்தப்பிரமவாதி பிரபஞ்ச பேதத்தையெல்லைப்பட அறியாது சத்தமேயுள்ளதென்று வகுத்துச்சொன்னான். ௧

பரிணா மம்விவர்த் தநம்மா யம்அதில்
தருமாம் உலகுள் ளதுசத் தமதே
பொருளா வதுசொல் நலம்அல் லவெனில்
மருவா துபொருட் டிறமற் றிலையே. ௨௰௯

(உரை) சத்தத்தாலே பரிணமித்து மிகவும் உண்டாதலே மயக்கமாம். அந்த மயக்கத்திலே உலகத்தை யுண்டாக்கப்படுவது மாகையால், உள்ளதாகக் காணப்பட்டது சத்தமொன்றுமே, சத்தத்துக்கு அர்த்தமென்று சொல்லப்பட்டது அச்சத்தத்தின் நன்மையேயாகும். சத்தத்தின் நன்மையன்று அர்த்தம் அர்த்தத்தின் நன்மையே சத்தமென்றுகூறின், சத்தங்கூடா தொருபொருளுண்டாவதில்லை; ஆதலாற் சத்தத்தின் நன்மையே அர்த்தமாம். ௨

பூமா வெனவே உரையும் பொருளும்
ஆமாம் பொருளொன் றில்அளைந் திலதால்
நாம்ஆ தரவெய் துசொல்நன் கருவாய்த்
தாமாம் பொருள்நெற் பொரிதா னெனவே. ௨௧௦

(உரை) பூவெனவும் மாவெனவும் இரண்டுசொல்லுளவாய் அவற்றிற்குப் பொருள் கூறுமிடத்துப் புட்பமென்றும் இலக்குமியென்றுங் கூறப்படும். அப்படிக் கூறப்படும் பொருளொன்றிலே சத்தம் அடங்காமற் பூமியெனவும் விலங்கெனவுஞ் சொல்லப்பட்ட பொருளையுங் கொள்ளப்படுமாதலால், நாம் விருப்பத்தைக்கொண்டு சொல்லுஞ்சொல்லே நல்ல கருப்பமாகக்கொண்டு பல பொருள்களுமுண்டாம்; அஃதென்போல வென்னில், நெல்லிற்றோன்றும் பொரிக்கு நெல்லே கருப்பமானாற்போல அர்த்தத்துக்குச் சத்தமே கர்ப்பமாம்.

பொரிக்கு வன்னபேதமும் நாமபேதமும் உண்டாயினும் நெல்லே அதற்குக் கருப்பமானாற்போல அர்த்தம் பலபேதப்படினுஞ் சத்தமே கருப்பமாமென்பது கருத்து. ௩

சொல்வந் தெழலும் பொருள்தோன் றுதலால்
சொல்லே பொருளென் றுதுணிந் திடுநீ
சொல்லும் பொருளும் உடனின் றதெனின்
சொல்லும் பொருளின் றுசொல்நின் றதுவே. ௨௧௧

(உரை) யாதொருசொல் தந்ததால் ஓட்டங்களாலே யுண்டாக அந்தச்சொல்லிலே பொருளும் உண்டாமாதலாற் சொல்லே பிரதானமென்று நீ தெளிந்திடுவாயாக; அற்றன்று,—சொல்லும்பொருளும்

உடனிற்கையாற் பொருளுந்தனியே யொருமுதலென்றுகூறின், ஒருசொற்குப் பொருளுரைக்குமிடத்துப் பொருளுஞ்சொல்லாமாதலாற் சொல்லொழிந்து பொருளென் றொன்றுண்டாவதில்லை; அதனாற் சத்தமே பிரமமென்று கொள்வாயாக. ௪

சத்தப்பிரமவாதி மத மறுதலை

உரையா னதுமை யலினால் உலகேல்
உரையாய் ஒருமை யலும்உள் ளதென
வரையா துணரும் அதுவண் கதியேல்
வரையா மறையோ டுமலைந் தனையே. ௨௧௨

(உரை) சத்தமானது பரிணாமவிவர்த்தனமாகிய மயக்கத்தினாலே பிரபஞ்சமாமென்று கூறினாய்; அங்ஙனமாயின், சத்தமே சர்வமுமாம் என்பதன்றிச் சத்தத்திலேநின் றுண்டாகத்தக்கதொரு மயக்கமும் உண்டென்று சொல்லாய். அஃதன்றியும் பொருளை வரையாமல் சத்தத்தைப் பிரமமென்று குறித்துணர்தலே நல்ல முத்தியென்று கூறினாய்; அங்ஙனமாயின் வேதத்திற் சொல்லப்பட்ட கன்மத்தையும் ஞானத்தையும் செய்வதும் உணர்வதுஞ் செய்யாமல் முத்தியடையலாமென்று வேதத்தோடு மறுதலைப்பட்டுக் கூறினாய்.

வேதஞ்சொன்னபடி கன்மஞ் செய்தானாயினும் ஞானமுணராதார்க்கு முத்தியில்லையென்று வேதாகம சாத்திர புராணங்கள் சொல்லவுஞ் சத்தமே பிரமமென்றறியும் அறிவால் முத்தியடையலாமென்பது மாறுபாடு. ௧

அருவம் உரையா தலின்அவ் வுருவாய்
மருவும் பரிணா மம்மறந் திடுமாம்
பருகுந் ததியா னதுபா லதெனில்
உருவம் அதுவாய் அழியும் உரையே. ௨௧௩

(உரை) அந்தச் சத்தமானது அரூபமாதலாற் பிரபஞ்ச ரூபமாய்ப் பரிணமித்துப் பொருந்துதலை நினைக்கமாட்டாதாம்; அற்றன்று, குடிக்கும் பகுதியான பாலானது தின்னும் பகுதியாகிய தயிராய் உருப்பெற்றாற்போல அருவமாகிய சத்தம் உருவமாகிய பிரபஞ்சமாயுருப்பெறுமென்று நீ கூறின், அத்தயிர் மீளவும் பாலாகுந் தன்மை

யின்றித் தயிராய்நின்றழியுந் தன்மைபோல, சத்தமும் பிரபஞ்சமாய் உருப்பெற்றால் மீளவுஞ் சத்தமாகுந் தன்மையின்றிப் பிரபஞ்சமே யாய் நின்றழியும். ௨

ஆயம் உடன்அந் தவிவர்த் தநமும்
மாயவ் வுளதென் றுசொல் எவ்விடமு
மாய்நின் றமையின் உரையின் நலமும்
ஆயும் பொருளுக் கறிநா மமதே. ௨௧௪

(உரை) சத்தத்தின் வரவு பிரபஞ்சமாய் வருதலும் பலரூபங் களாய்ப் பரிணமித்து வருதலுஞ் செய்கையால் சத்தத்துக்கு இப்போ தழிவுண்டாதல் வேண்டுமென்று சொல்லாய்; அஃதன்றியும், சத்தத் துக்கு நன்மை யென்றபொருள் எவ்விடமுமாய் நின்றமையின் அப் பொருளை யாராயுமிடத்து அப்பொருளுக்குப் பெயர்ச்சொல்லாய் நின்று பொருளை விளக்குவதே நன்மையென்றறிவாயாக.

எனவே, சத்தத்தினும் அர்த்தமே சிறப்பையும் நிலைபேற்றை யும் உடைத்தென்பது கருத்து. பரிணாமமாகின் நெருப்பென்ற போது நெருப்பா யெழுந்திருக்கவேண்டும்; விருத்தியாகின் நெருப் பென்றபோது வாய்வேகவேண்டும்; ஆதலால் தாதான்மியமுமன்று ததுற்பத்தியுமன்று இடுகுறிப்பெயரா மென்றதெனக்கொள்க. ௩

உரைபோல் பொருளுக் குருவின் மையினவ்
உரையே பொருளென் றனைஇன் றரியென்
உரையே கவிமா லவனுக் குளதாம்
உரையாய் கவியா கவொர்மா லினையே. ௨௧௫

(உரை) சத்தத்தைப்போல அர்த்தத்திற்கும் உருவமில்லாமை யினால் அச்சத்தமே அர்த்தமென்று கூறினாய். இன்று அரியென்று சொல்லப்பட்ட சத்தம் திருமாலினுக்குங் குரங்குக்கும் மற்றும் பல பொருட்கும் பெயராகச்சொல்லலாம்; அதனைப் பொருள்தன்மை யிலே நின்றுஞ் சத்தங்கொள்ளாமற் சத்தத்தின் தன்மையிலே நின் றும் பொருள் கொள்ளலாமாகில், திருமாலைக் குரங்காகச் சொல்வா யாக.

எனவே, சொல்வேற்றுமையும் பொருள்வேற்றுமையும் உண் டென்பதாயிற்று. இதனால், சத்தமும் பொருளும் ஒன்றுபட்டிருந் தாலும் இரண்டும் வேறென்றே காண்க என்றதாம். ௪

நெல்லில் பொரியா வதுநீ டழலில்
சொல்லில் பொருளொன் றெடுதொக் கிடலால்
கல்வித் திறமாம் உரைகாட் சியினால்
மல்லற் பொருள்சா லவளந் தருமே. ௨௧௬

(உரை) பொரிக்கு நெல்லே கர்ப்பமானாற்போலப் பொருட்கெல் லாஞ் சொல்லே கர்ப்பமென்று கூறினாய்; அங்ஙனமாயின், நெல்லு மிக்க நெருப்பினைச் சேர்ந்தாற் பொரியாவதாதலால் நீ கூறியது உவமையன்று. பூமா முதலிய வொருசொல்லிலே பல பொருள்கூடி நிற்றலால் அதனை யறியக்கற்பதே சத்தம்; அப்பொருளைப் பிரித் தறியப்பட்டால் நல்ல வளப்பத்தினையுடைய பொருள்தானே நின்று மிகவும் நன்மையைத் தருமாதலால் நீ கூறிய சத்தத்திலும் அர்த் தமே சிறப்புடைத்து. ௫

முன்கண் டபொருள்பெயரா தலினால்
பின்கண் டபிழம் புணரும் பெயரால்
நன்கண் டபொருட் கொருநா சமதின்(று)
என்கண் டனைகா ரணமின் றழிவே. ௨௧௭

(உரை) முன் அறிவினாற் காணப்பட்ட அர்த்தமே சத்தமான பெயராய் நிற்கையாலும், பின்காணப்பட்ட உருக்களைச் சத்தமான பெயரைக்கொண் டறிகையினாலும், நன்றாகக் காணப்பட்ட அர்த்தத் துக்குக் கேடில்லையாம்; எனவே, சத்தத்துக்குக் கேடுண்டாம், காரிய மாகிய சத்தமழிதலே யன்றிக் காரணமாகிய அர்த்தம் அழியுமென்று சொல்லுகை எப்படி யறிந்தாய்.

எனவே, அர்த்தங் காரணமென்றும் பிரதானமென்றுமாயிற்று. என்கண்டனை யென்பது - எதுகொண்டு கண்டாயென வினாவியது.

பொருள்இந் திரியம் உணர்வோ டுபுமான்
இருளின் றியிடும் ஒளிஇத் தனையும்
மருவும் பொழுதில் வருஞா னமதின்
ஒருவும் பெயர்அர்த் தம்உதித் திடுமே. ௨௧௮

(உரை) ஆன்மா ஒரு விடயத்தை யறியும்போது, அறியப்படு பொருளும் அதனைக் காட்டும் இந்திரியமும் அதனோடு கூடியுணரும் அந்தக் கரணங்களும் அவற்றிற்கு மூலமாகிய பிரகிருதியும் அவற்றை

வெளியாகத் தோற்றுவிக்கிற திரோதான சத்தியுமாக இத்தனையுங் கூடுமளவில் ஆன்மாவுக் கறிவுண்டாம். அவ்விடத்திற் பெயர் நீங்கப் படும் பொருள் தோன்றப்படுமாதலால் அர்த்தமே பிரதானம்.

இருளின்றியிடும் ஒளியென்பது - கன்மத்துக்கீடான புசிப்பிற் செலுத்துகையால் திரோதாயி ஒளியென்றாயிற்று. ஒருவும் - நீங் கும். ஆண்பனையிற் குரும்பை தோன்றினது பெரியோர் வசன மாகிய சத்தத்திலே யன்றோவென்னில், அவர் சிவோகம் பாவனா பலத்தினால் உண்டான தொழியக் கேவலஞ் சத்தத்திலுண்டான தன்று; உண்டாகில் எல்லா வசனங்களினும் உண்டாக வேண்டு மெனக் கொள்க. எ

அத்தம் தெளிதற் கொளியா னதுபோல்
சத்தம் பொருள்தான் அறிதற் குளதாம்
நித்தம் அதுவன் றுரைநின் றழியும்
சித்தன் ஒருவன் உரைசெய் தனனே. ௨௧௯

(உரை) இருளின்கட் கிடக்கும் பல பொருள்களைத் தெரிதற் குக் கைவிளக்குண்டான தன்மையைப்போல, பல பேதப்பட்ட பொருள்களையும் அறிதற்குச் சத்தமுண்டானதாம், அந்தச் சத்தம் நிலைபேறுடைத்தன்றாய்ப் பொருளாகிய காரண மில்லையாயில் தானுங் காரியப்படாதழியுமாகையால், இந்தச் சத்தஞ் சித்தனாகிய பரமேசுவரனாலே யுண்டாக்கப்கபட்டதாதலால், அதனைப் பிரம மென்று சொல்லக்கடவையன்று. அ

மாயாவாதி மதம்

நானே பிரமம் என்றுரைத்து ஞாலம் பேய்த்தே ரெனஎண்ணி, ஊனே புகுந்து நின்றுயிர்கட் குபதே சங்கள் உரைத்துவரும், மானா மதிகே டனுமாய மாயா வாதி பேயாகித், தானே உரைக்கும் அந்நூலின் உண்மை தன்னைச் சாற்றுவாம். ௨௨௦

(உரை) ஆன்மாவுஞ் சிவமு மொன்றாது அகம்பிரமமென்று சொல்லிப் பிரபஞ்சமெல்லாம் கானற்சலம்போலப் பொய்யெனக் கருதிக் கருப்பாசயம் நீங்காமல் நின்று தான் மற்றுள்ள ஆன்மாக் களுக்கு உபதேசங்கள் சொல்லித் திரிகின்ற நாணமில்லாத அறி வீனனாகிய மாயாவாதி பித்தேறி வேதாகமங்களுக்குப் பொருந்தாமல் தனக்குப் பொருந்தத்தானே சொல்லிக்கொள்ளும் அந்த நூலினது உண்மையின் தன்மையைச் சாற்றுவாம்.

ஊனே புகுந்துநின் றென்பது - தான் பிரமமாயின் ஊனிற்புகு தல் வேண்டாவென்பது கருதியென்க. உயிர்கட் குபதேசங்களு ரைத்து வருமென்பது - சர்வ ஆன்மாக்களுந் தன்னைப்போலப் பிரம மாகையால் உபதேசஞ் சொல்லவேண்டா என்பது கருதியென்க. க

அறிவாய் அகில காரணமாய் அநந்தா நந்த மாய்அரு வாய்ச், செறிவாய் எங்கும் நித்தமாய்த் திகழ்ந்த சத்தாய்ச் சுத்தமாய்க், குறிதான் குணங்க ளொன்றின்றிக் கூறும் வேதம் தனக்களவாய்ப், பிறியா அநுபூ திகந்தனக்காய் நின்ற தந்தப் பிரமந்தான். ௨௨௧

(உரை) ஞானமே சொரூபமாய்ப் பிரபஞ்சத்துக்குக் காரணமாய் எல்லையில்லாத ஆனந்தமாய் உருவமின்றி அருவமாய் எங்கும் நிறைந்து நிற்பதாய்க் கேடிலாதாய் விளங்குஞ்சத்தாய் அசுத்தத் துடன் கூடாது சுத்தமேயாய், ஓரடையாளமும் ஒருகுணமுமில்லை யாய்ச் சொல்லத்தக்க வேதங்கட்கு வரம்பாய் நீக்கமில்லாத அநுபூதி தனக்கே யுடைத்தாய் நின்றது உயர்ந்த பிரமம்.

பிறியா வநுபூதிகந்தனக்காய் என்றதனால், ஞாதிரு ஞான பேத மில்லை என்பதாயிற்று. உ

ஒன்றாம் இரவி பலபாண்டத் (து)உண்டாம் உதகத் தங் கங்கே, நின்றாற் போல உடல்தோறும் நிகழ்ந்து நிற்கும் பொருள் மேற்கண், சென்றாற் போலப் புலன்களுக்குஞ் சிந்தை தனக்குந் தெரிவரிதாம், என்றால் காட்சி முதலாய இருமூன் றளவைக் கெட்டாதால். ௨௨௨

(உரை) ஓராதித்தன் ஆகாசத்திலே நிற்கப் பல பாத்திரங்களி லும் உண்டாகிய ஜலங்களிலே தனித்தனியே தோன்று மாறுபோல, ஏகமாகிய பிரமம் உடல்கள் தோறுந் தனித்தனியே தோன்றப்பட்டு நிற்கும், அவ்வாதித்தன் பாத்திர வுதகங்களில் அகப்படாமல் மேற்பட இயங்குகின்றாற்போல, அந்தப் பிரமம் உடலில் அகப்படாது மேற் பட்டு இந்திரியங்களுக்கும் கரணங்களுக்கும் அறிதற்கரிதாய் நிற்கும், இப்படிச் சொல்லப்படுகையாலே காட்சி முதலாய ஆறளவைக்குந் தெரிதற் கரிதாம். ந

பொருள்மேற்கண் பாத்திரத்திடத்துக் கண்ணனை தோடிக் கண்டாற்போல அறிவுகளுக் கிராவணன் பலதலையுங்கொண்டு வியாபரித்தாற் போலவும் ஆயிரம் பணமுடியையுடைய அநந்தனைப்போலவும் ஒருவனுமே பலமுகமாய் வழங்காநின்றான். இருமூன்றளவை—பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம், உபமானம், அருத்தாபத்தி, அபாவம்.

இருளில் பழுதை அரவெனவே இசைந்து நிற்கும்
இருங்கதிர்கள், அருளப் பழுதை மெய்யாகி அரவும் பொய்
யாம் அதுவேபோல், மருளில் சகமுஞ் சத்தாகி மருவித்
தோன்றும் மாசில்லாத், தெருளில் சித்தே சத்தாகும் பித்
தாம் சகத்தின் செயலெல்லாம். ௨௨௩

(உரை) இருளின்கட் புற்றருகே ஒரு பழுதை கிடப்ப, அதனைக் கண்டோர் பாம்பெனவே பொருந்திநிற்கும் அளவில் ஆதித்த கிரணங்கள் தோன்றப் பழுதை மெய்யாய்ப் பாம்பு பொய்யாம் அது போல், பொய்யாகிய பிரபஞ்சத்தினுடைய செயலும் மயக்கத்தாலே மெய்யாகப் பொருந்தித் தோன்றும், மயக்கமற்ற பிரமஞானம் விளங்கின காலத்துப் பிரமமே யுண்மையாகப் பிரபஞ்சத்தின் செயலெல்லாம் பொய்யாம். ௪

உலகந் தானும் நிருவசநத் துண்டாம் இன்றேல் உதியாது
நிலவி யுண்டேல் அழியாது நிற்ப தாகும் மித்தையால்
இலகு சுத்தி கனல்சேர இன்றாம் வெள்ளி நின்றதாம்
குலவு சகமும் அவிகாரம் பரமார்த் தத்தில் கொள்ளாதால்.

(உரை) பிரபஞ்சமானது வசநரகிதமான பிரமத்திலே நின்றுந் தோன்றும். அந்தப் பிரமத்தினின்றுந் தோன்றாதாகில் வேறோர் உபாதான முண்டாய்ப் பிரபஞ்சந் தோன்றுவதுமில்லை. பிரபஞ்சத்தை ஒருவர் தோற்றுவிக்காமல் தானே யுண்டாமாகில் அதுவும் ஒரு முதலா யழியாது நிற்கத்தகும் ; அஃதன்றி அழியப்படுவதி யாங்ஙனமென்னில், பிரபஞ்சம் மெய்போலத் தோன்றினும், பொய்யாகை நிச்சயமாகையால் ; அஃதன்றிப் பிரபஞ்சம் மெய்போலத் தோன்றிப் பிரகாசிக்கிறபடியும் பாரமார்த்தத்திற் பொய்யாகிறபடியும் எங்ஙனமென்னில், வெள்ளிபோலப் பிரகாசிக்கும் இப்பியையும் வெள்ளியையுங் கனலிவிட்டால் இப்பி கெட்டு வெள்ளிநின்றாற்

போல மெய்போலத் தோன்றும் பிரபஞ்சமும் அவிகாரமாகிய பிரமமும் பரமார்த்தத்தில் நிரூபணஞ்செய்தால் அவிகாரமாகிய பிரமமே மெய்யாய்ப் பிரபஞ்சம் பொய்யாகக் கொள்ளப்படும்.

நிருவசநம் அவிகாரம் என்பன பிரமத்துக்கோர் ஆகுபெயர். சுத்தி - இப்பி, கிளிஞ்சில். ௫

தாங்கும் உலகுக் குபாதாநம் சத்தாம் சிலம்பி நூல்தன்
பால், வாங்கி வைத்துக் காப்பதுபோல் வையமெல்லாம் தன்
பக்கல், ஓங்க உதிப்பித் துளதாக்கி நிறுத்தி ஒடுக்கத் தில
தாக்கும், ஆங்கு வந்த வாறதனால் சத்தாம் சகத்தின் அமை
வெல்லாம். ௨௨௫

(உரை) ஆதாரமாகிய பிரபஞ்சத்துக்கு உபாதாநம் சத்தாகிய பிரமமேயாம் ; அஃதென்போல என்னில், சிலம்பியானது நூலைத் தன்னிடத்திலே நின்றுந் தோற்றுவித்து அந்த நூலை ஓரிடத்திலே யுண்டாக்கிவைத்துப் பாதுகாத்துப் பின்பந்த நூலழியும்படி தானீங்குந் தன்மைபோலப் பிரமமும் பிரபஞ்சபேதம் எல்லாவற்றையுந் தன்னிடத்திலே நின்றும், விளங்கத் தோற்றுவித்தும் அவற்றை உளதாக இரக்ஷித்தும் பின்னில்லையாம்படி சங்கரித்திடும். அப்படிப் பிரமத்திலே தோன்றி நின்று கெடுகையாற் பிரமத்தினுடைய நியமமே பிரபஞ்சத்தின் செயலெல்லாம். ௬

மன்னும் பிரமந் தனின்வானய் வானின் வளியாய்
அந்தவளி, தன்னின் அழலாய் அழலின்பால் சலமாய்ச்
சலத்தில் தாரணியாய்ச், சொன்ன இதனின் மருந்தாகித்
தோற்றும் மருந்தில் அன்னமாய், அன்ன மதனில் துவக்
காதி ஆறு தாது ஆயினவால். ௨௨௬

(உரை) கேடில்லாத பிரமத்திலே ஆகாசந்தோன்றி ஆகாசத்திலே வாயுதோன்றி அவ்வாயுவிலே அக்கினி தோன்றி அக்கினியிலே ஜலந்தோன்றி ஜலத்திலே பிருதிவி தோன்றி, கூறிய இப் பிருதிவியிலே ஓஷதியாய்த் தோற்றிய வோஷதியிலே உணவாய் அவ்வுணவிலே காயப்பகுதிப்பட்ட தாதுக்களாறும் உண்டாயின.

தாதுக்கள் ஆறாவன—தோல், எலும்பு, நரம்பு, மச்சை, சோரி சுக்கிலம் என்பவை. இவை காயத்தின் பகுதிக்கோர் பொதுப் பெயர்.

ஆறு தாதுக் களும்கூடி வந்த கோசம் அன்னமயம்
மாறில் பிராண கோசமயம் மன்னு மதனில் மனோமயந்தான்
வேறு வரும்விஞ் ஞானமயம் மேவும் அதனின் அதுதன்னில்
கூறி வரும்ஆ நந்தமயம் கோச மயம்பின் கூடியதால் ௨௨௭

(உரை) அவ்வாறு தாதுக்களுங்கூடி யுண்டாகியது அன்னமய கோசம், பொருந்திய அந்த அன்னமய கோசத்திலே மாறில்லாது வாயுப்பரந்து துடிப்புண்டானது பிராணமயகோசம். அந்தப் பிராண மயகோசத்திலே மயக்கம் நீங்கிப் பழையமனங் கூடுவது மனோமய கோசம், பொருந்திய அந்த மனோமயகோசத்திலே வேறாகவருஞ் சோத்திராதிகள்கூடி அறிவாயிருப்பது விஞ்ஞானமய கோசம்; அந்த விஞ்ஞானமய கோசத்திலே கூறுகின்ற வாக்காதிகள் கூடி ஆநந்தமாயிருப்பது ஆநந்தமயகோசம், மயமென்னுஞ் சொல்லின் பின்னே கோசமென்னுஞ் சொற்கூடியதாம் அ

கோச உருவில் பிரமந்தான் கூடித் தோன்றும் நீடுமொரு
காசம் மருவும் கடந்தோறும் நின்றாற் போலக் கதிரவன்தன்
வீசு கிரணம் உருவின்கண் வெளிப்பட் டிடுவ ததிற்பற்றும்
பாசம் அதனுக் கின்றாகும் என்றாற் பரத்திற் பற்றுண்டோ.

(உரை) பஞ்சகோசமாகிய உருவின்கண்ணே பிரமமானதுகூடிப் பிரகாசிக்கும்; அஃதென்போலவென்னில் எட்டுதற்கரிதாய ஒப்பற்ற ஆகாயத்தின் கண்ணே பொருந்திநிற்கும் ஆதித்தனது மிகுந்த கிரணமானது பூமியின்கண் வைத்த கடந்தோறுந் தனித்தனியே தோன்றுமாபோல, அந்தப் பிரமமும் ஆதித்தனைப்போல எட்டாதாயினும் உருக்கள்தோறுந் தனித்தனியாய் நிற்கும், பிரமம் அப்படிப் பாசத்தோடுகூடி நின்றதாயினும் பிரமத்தைப் பாசஞ் சென்று பற்றுவதில்லையாம், பிரமத்தைப் பாசம் பற்றாதாகையால் அந்தப் பிரமத்துக்குப் பாசத்தோடு பற்றில்லை. ௯

அலகில் மணிக ளவைகோவை அடைந்த பொழுதின்
அங்கங்கே, நிலவும் ஒருநூல் பலநிறமாய் நின்றாற் போல
நீடுருவம், பலவும் மருவு பேதத்தால் பன்மை யாகும் பிர
மந்தான், குலவு போக போக்கியங்கள் கொள்ளும் போன்று
கொள்ளாதால். ௨௨௯

எண்ணிறந்த பல வன்னமாகிய மணிகளைக் கோவையாகக் கோத்தவிடத்தே ஒரு நிறப்பட்ட நூல் அம்மணிகளாலே பலநிறமாய் நின்றாற்போல, பிரபஞ்சத்தில் தோன்றப்பட்ட யோனிகள் பலவாகப் பேதிக்கப்படுகையால் அவற்றோடுங் கூடிய பிரமமும் பல பேதப்பட்டாற்போல அங்கங்கே தோன்றும்; ஆகையால் மணிகளிற் பொருந்தின நூலுந் தன் தன்மைகெடாது நின்றாற்போலப் பிரமமும் போக போக்கியங்கள் கொள்வாரைப் போன்று கொள்ளாதாய் நிற்கும். ௧௦

போற்றும் செயலால் பலநாமம் புனைந்து போக போக்கி
யத்தில், தோற்றும் நனவு கனவினுடன் சுழுத்தி துரியம்
எய்தும் இதற்(கு), ஏற்ற கரணம் நிரைநிரையே ஈரேழ்
நாலொன் றெல்லாமும், மாற்றி நிற்கும் கேடின்றி வந்த
போகம் மாய்ந்திடவே. ௨௩௦

(உரை) பிரபஞ்சத்தார் துதிக்குந் தொழிலாலே பரமான்மாவென்றும் ஜீவான்மாவென்றும் அந்தரான்மாவென்றும் நரகான்மாவென்றுந் திரியக்கான்மாவென்றும் பல பெயர்களையும் பொருந்தி, போகத்திலும் போக்கியத்திலும் கூடி அநுபவிப்பாரைப்போலத் தோன்றும். சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியமென்னும் நாலவத்தையும் பொருந்தும், அவ்வவத்தை நாலிற்குங்கூடி நிற்குங்கரணம் அடைவே நிரைநிரையாகக் கொள்ளுமிடத்துச் சாக்கிரத்துக்குப் பதினாலும், சொப்பனத்துக்கு நாலும், சுழுத்திக்கொன்றும், துரியத்துக்குக் கேடில்லாத வந்தப் புண்ணியபாவங்கள் கெடும்படி எல்லாவற்றையும் நீங்கி நிற்கு மிடமுமாக நிற்கும்.

சாக்கிரத்திற் பதினான்கு கருவியாவன—சோத்திராதி யைந்து, சத்தாதியைந்து, அந்தக்கரணம் நான்கு ஆகப் பதினான்காம். சொப்பனத்திலாவன—அந்தக் கரணங்கள். சுழுத்தியிலொன்றாவது - உள்ளம், இதனையே சித்தமெனக்கூறுவர். பிரகிருதி புமான் மகான் புருடன் அவித்தை அவ்வியத்தம் மூலப்பிரகிருதி என்பன ஒருபொருட்கிளவி. பிரமமொழிய எல்லாம் நீங்கி நின்றவிடந் துரியம். போகம் - புண்ணியபாவம். போக்கியம் - மனம். இவை யிரண்டிற்குஞ் சாட்சிபூதம் பிரமமென்பது கருத்து. அவத்தை யென்பது - பிரமம் உபாதிகளோடுங் கூடினாற் பேதிக்குமவதரம். சாக்கிரம் - விழிப்பு. சொப்பனம் - பிரகிருதி யவதரம். சுழுத்தி - பிர

கிருதி ரூபம். போகபோக்கியம் என்பது - புசிப்பும் புசிப்புக்கிடமாகிய பதார்த்தங்களும். துரியமாவது கருவிநீங்கின விடமெனக் கொள்க. கக

கருவி யெல்லாம் நானெனவே கருதல் பந்தம் அக்கருத்தை
ஒருவ முத்தி யுண்டாகும் உள்ளம் வித்தாம் செய்தியினால்
மருவும் மாயா காரியங்கள் அவித்தை மாய வேமாயை
பிரியும் பிரிய ஞானமது பிறக்கும் பிறவா பேதமே. உ௫க

(உரை) கருவிகள் பதினேலோடுங்கூடி அவற்றை நானென்று கருதி நிற்பது பந்தமாம். அக்கருவிகள் பதினேலோடுங் கூடாமல் நீங்கித் துரியத்துநிற்கவே தற்சொரூபமாகிய சிவோகம்பாவம்பிறந்து முத்தியுண்டாம், பந்தத்துக்கு வித்தாவது மூலப்பிரகிருதி, அந்த மூலப்பிரகிருதியின் செயலாலே மாயாகாரியங்களாகிய சுகதுக்கங்கள் பொருந்தும், அவித்தையாகிய மூலப்பிரகிருதியின் செயல்கெடவே மாயைநீங்கும், அம்மாயை நீங்கவே ஞானமுண்டாம்; அந்த ஞானமுண்டாகியவிடத்தே அந்தஞானம் பந்தந்தோன்றமற் சிவோகம் பாவம் பிறக்கும்.

கருவியெல்லாம் என்றது - தொண்ணூற்றாறு கருவிகளும். உள்ளம் வித்தாஞ் செய்தியினல் மருவுமென்பது - அவித்தையாகிய அறியாமையின் காரியத்திலே பொருந்துமென்க. கஉ

ஆன கன்ம அநுட்டயங்கள் அந்தக் கரண சுத்திதரும்
ஊன மின்றி அச்சுத்தி ஞான மதனை உண்டாக்கும்
ஞான மதுதான் பிரமத்தை நானென் றுணர்த்தும் நான்பிறந்தால்
வான மதிநீர்த் துளக்கமெனக் காணுந் தன்னை மாயையிலே.

(உரை) உண்டான கன்மாநுஷ்டானங்களாகிய வாகிய சுத்தியாலே அந்தக்கரணத்துக்குச் சுத்தியுண்டாம், குற்றமின்றி அச்சுத்தியானது ஞானத்தையுண்டாக்கும், அந்த ஞானந்தானே அகம்பிரமம் என்பதனை அறிவிக்கும், அங்ஙனந் தானென்றதன்மையிலே கருத்துமுற்றினல் ஆகாசத்திலுண்டாகிய சந்திரன் சலத்தின்கண்ணே நின்று விளங்கித் தோன்றும் உருவம்போல மாயையிலே தற்சொரூபமுந் தெரியும்.

துளக்கப்பாடு, சலத்துக்கொழி[illegible] பிரதிபிம்பத்துக் கில்லாதுபோல், அலேவு கரு[illegible]ற்கில்லை என்க.

[illegible]

சைவத் தேர்வுகள்

இத்தேர்வுகள் 1935ஆம் நவம்பர்மீ 17உ. ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். தேர்வுநிலைய நுழைவுத்தாள்கள் (Hall Tickets) மாணவர்கட்கு 10-11-35-ல் தபால்மூலம் அனுப்பப்படும்.

சித்தாந்த சாத்திர விற்பனை

நமது சமாஜ வெளியீடாகிய சித்தாந்த சாத்திரம் பதினான்கு (மூலமும் உரையும்) சமாஜ அங்கத்தினர்க்குக் குறைந்த விலையாகிய இரண்டு ரூபாவுக்குத் தரப்பட்டு வருகிறது. பிரதிகள் இன்னம் சிலவே இருப்பதால் அங்கத்தினர் விரைந்து வாங்குதல் நலம். சில நாட்கள் கழிந்த பின்னர் பிரதிகள் கிடைக்காமற் போதலும் கூடுமா கையால் முன் எச்சரிக்கையாயிருத்தல் நலம்.

திருப்புகழ் வெளியீடு

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப்பதிப்பாக அருணகிரி நாதர் அருளிச் செய்ததிருப்புகழ் முதலிய நூல்களனைத்தும் ஒரே புத்தகமாக அச்சேறி வருகிறது. பல ஓலைப்பிரதிகளைக் கொண்டு பாடங்கள் செப்பஞ் செய்யப் பெற்று, உரைக்குறிப்பு, தலக்குறிப்பு, விஷயஅகராதி முதலிய விசேடங்களோடு இப்பிரதி வெளிவரும். நமது சமாஜ ஆண்டு விழாவில் இந்நூல் வெளியிடப்படுமென்று எதிர் பார்க்கப்படுகின்றது.

திருவாசகம் மூலமும் உரையும்

திருத்தமான சமாஜப்பதிப்பு, திருவாளர் - கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்கள் உரை. திருவாளர்கள் - பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், அ. மு. சரவண முதலியார் ஆகிய மூப்பேரறிஞர்களால் செப்பஞ் செய்யப்பட்டது. கலிக்கோ பயிண்டு. நல்ல கிளேஸ் காகிதம் ; 532 பக்கங் கொண்ட அரிய நூல். விலை ரூபா மூன்று.

சமாஜ அங்கத்தினர்க்குக் குறைந்த விலை ரூபா 2.

ரிஜிஸ்தர் தபாற் கூலி அணா 8.

சில பிரதிகளே உள்ளன. உடனே முந்துக

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 8. No. 10

சித்தாந்த சாத்திரம் பதினான்கு
மூலமும் உரையும்

நமது சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு; 1133 பக்கங் கொண்டது; நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப் பெற்றது; அழகான முழுக்கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றது; மிகத்திருத்தமாகப் பல ஏட்டுப்பிரதிகளைக் கொண்டு மூலமும் உரையும் செப்பஞ் செய்யப்பெற்றது; சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மைநெறி விளக்கம் ஆகிய மூன்று நூல்கட்கும் இதுவரை அச்சிடப்பெறாத சிந்தனையுரையோடு கூடியது; துகளறுபோதம் என்ற நூலின் மூலத்தை அநுபந்தமாக வுடையது.

தனிப்பிரதி விலை ரூபா மூன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 12.

நான்கு பிரதிகள் விலை ரூபா பத்து.

ரயில்வே பார்சல், தபாற்கூலி வேறு. விவரங்கட்கு உடனே ரிப்ளை கார்டு எழுதுக. சிலோன் வாசிகட்கு வி. பி. இல்லை. இன்று முதல் ஒருமாதம்வரையில் 1935ஆண்டுக்குரிய சந்தாவைச் செலுத்திய சமாஜ அங்கத்தவர்க்குமட்டும் ஒவ்வொரு பிரதி ரூபா இரண்டு என்ற விலைக்குத் தரப்படும். இதைப் பெறுவதற்கு விலையும் தபாற்கூலியும் முன்பணமாகச் செலுத்தப்படவேண்டும். வி. பி. இல்லை. பிரதிகள் சிலவே யுள்ளபடியால் உடனே பணம் அனுப்பிப் பெறுக.

இங்ஙனம்

10—10—1935. ம. பாலசுப்பிரமணியன்

காரியதரிசி.

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 29-A, Kallukaran Street, Mylapore Madras.